
# தமிழீழம்

வெளியீடு : தமிழீழ தேசிய இராணுவம்



# எமது நோக்கு



மலர் : ஒன்று அக்டோபர் 1985, இதழ் : இரண்டு

## இதன் முடிவில்..................

தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான தமிழீழம் தவிர்ந்த அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் இப்போது மீண்டும் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. தமிழீழ விடுதலை இயக்கங்கள் டெல்லிக்குச் சென்று இந்திய அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்டுள்ள ''நகல் தீர்மானத்தை'' விவாதிக்க ஆரம்பித்துள்ளன. எவ்வித நிர்ப்பந்தமுமின்றியே விடுதலை இயக்கங்கள் பேச்சு வார்த்தைகளில் பங்கேற்க உள்ளன. திருப்தியுற்ற இந்திய அரசு நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட திரு. பாலசிங்கம் மீண்டும் பாரதத்திற்கு நுழைய அனுமதி அளித்துள்ளது.

பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளும் அத்தனை இயக்கங்களுமே பேச்சு வார்த்தையால் ஈழத்தமிழர் பிரச்சனைக்கு-இனப்படுகொலைக்கு தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கையில் இல்லை. ஆனால் இந்திய அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவே பங்கு கொள்கின்றன. இந்திய அரசாங்கத்தின் நல்லெண்ணத்தை பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நடுநிலைமை வகிக்கும் நற்பாங்கினைப் பாராட்ட வேண்டியுள்ளது. ஆனால் இந்த நேரத்தில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள செயல்பாடுகளையும், வெளியிடும் அறிக்கைகளையும் பார்க்கும்போது உண்மையிலேயே இம்முறையாவது அவர்கள் முறையாகப் பிரச்சனையைத் தீர்க்க முன் வந்துள்ளார்களா அல்லது அவர்களின் அரசியல் அடிச்சுவட்டில் இதுவும் ஒரு அத்தியாயமா என்ற சந்தேகம் தோன்றியுள்ளது. போர் நிறுத்தத்தை அவதானிப்பதற்கு ஒரு சர்வதேசக்குழுவை அமைக்கும்படி தமிழ் ஈழ போராட்ட இயக்கங்கள் கேட்டுக் கொண்ட போது நிர்தட்சண்யமாக அதை மறுத்த இலங்கை அரசு தன் இஷ்டப்படி ஒரு குழுவை அமைத்தது. இதனால் இப் போர் நிறுத்த உடன்படிக்கையும் சரியானமுறையில் நடைமுறைப்படுத்தப்படும் —அவதானிக்கப்படும் என்ற நம்பிக்கை நம்மவர்களிடையே ஏற்படவில்லை.

அத்துடன் போர்நிறுத்த காலத்தில் இராணுவ முகாம்களில், சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள, தமிழ் இளைஞர்களின் நலன்களை அவதானிக்கும் குழுவை அமைப்பதற்கு இப்போதுதான் சம்மதம் தெரிவிக்கின்றது சிறீலங்கா அரசு. அதைவிடப் பிரதானமாக தங்களது நகல் திட்டத்தைக்கூட வெளிப்படையாக அறிவிக்க இலங்கை அரசு பின்நிற்கிறது. இதுவும் கூட இவர்களது இதயசுத்தின்மையே காட்டுகிறது.

போர்நிறுத்த உடன்பாட்டை ஏற்று அதை நடைமுறைப்படுத்த போராட்ட இயக்கங்களும் முன்வந்துள்ள இதே நேரத்தில் இலங்கை அரசாங்கத்தின் ஜனாதிபதி கண்டியில்7-10-85 அன்று நடைபெற்ற அகில இலங்கை சிங்கள பௌத்த சங்கக்கூட்டத்தில் ''சிலர் அரசாங்கத்திற்கு இப்படிச் செய்ய வேண்டும் எனக் கூறுகின்றனர்கள். நாம் அரசியல் அமைப்பிற்கு முரணாக எதுவும் செய்ய முடியாது. அதற்கு அப்பாற்பட்டவிதத்தில் நாம் செயல்படமாட்டோம்''

எனக்கூறியுள்ளார். அதாவது இதன் பொருள் தற்போதைய அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களே பரவலாக்கப்படும் எனவும் அந்த விதமான எந்த ஜன வாக்கெடுப்புக்கு விடப்பட்ட பின்னரே நடைமுறைப்படுத்தப்படும் எனவும் சொல்லாமல் சொல்கிறார். இது ஒருபக்கமிருக்க உப வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு நிதிக்கென அதாவது "தமிழரைக் கொலை" செய்யும் இலக்கென 83.33 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப் பணம் நவீன இராணுவத்தளபாடங்கள் வாங்குவதற்கும், கொலைப் படையின் எண்ணிக்கையை அதிகரிக்கவுமே பயன்படுத்தப்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை அத்துடன் மிகவிரைவில் சிறப்புக்காவல்படைப் (Reserve Police) பிரிவு அமைக்கப்படுமெனவும் தேசிய இராணுவப்படை என்பதன் கீழ் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைவருமே இராணுவப் பயிற்சி பெறவேண்டும் எனவும், தவறுபவர்கள் நான்கு வருடச்சிறைத் தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள் எனவும் அறிவித்துள்ளது சிங்கள அரசு. இவையெல்லாவற்றையும் பார்க்கும் போது உண்மையிலேயே இவர்கள் பேச்சுவார்த்தையில் ஏற்படும் தீர்வை எதிர்நோக்கியுள்ளனரா அல்லது இதை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி மேலும் தமிழரைத் தீர்த்துக்கட்ட முனைத்துள்ளனரா என சந்தேகிக்கிறோம் சிறீலங்கா அரசு எம்மை மட்டுமல்ல, நடுவில் நல்லெண்ணத்துடன் செயற்படும் இந்திய அரசையே ஏமாற்ற முனைகிறது என்பது வெள்ளிடை மலை.

பஞ்சாப் பிரச்சனைக்கு, அசாம் பிரச்சனைக்கு ஒரு அமைதித் தீர்வு ஏற்பட்டதென்றால் அதற்குக் காரணம் இந்திய-மத்திய அரசின் சரியான நோக்கும், ஜனநாயக மரபில் ஊறிநின்று இணங்கும் தன்மையுமேயாகும். இதே போல சுலபமாக ஈழப்பிரச்சனை தீர்க்கப்படும் என்பது எம்மை நாமே ஏமாற்றுவதாகும். இலங்கை அரசாங்கத்திற்கு பேச்சுவார்த்தையில் உண்மையிலேயே ஈடுபாடோ-பிரச்சனையைத் தீர்ப்பதில் கரிசனையோ கிடையாது.

இந்திய அரசினை நேச சக்தியாக எமது மக்களின் துன்பத்தைத் தீர்க்கும் மருந்தாக நம்பியிருக்கும் நாம் இலங்கை அரசின் மிதமான போக்கால் பேச்சு வார்த்தை தோல்வியடையும் போது, அந்த நேச சக்தி நெருக்கமான வலுவான தோழமை சக்தியாக எம்கரங்களை வலுப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

---

சிறுகதை :-

# ஒரு போராளி உருவாகிறான்

தீபன் ஒரு ஏழைக் குடும்பத்து இளம் வாலிபன். தாய், தந்தை, ஒரு அக்கா ஒரு தம்பி இப்படியாக இயற்கை எழில் கொஞ்சும் குறிஞ்சி நிலப்பிரதேசமான நுவரெலியாவில் வாழ்ந்தனர்.

தீபன் தந்தை கணேசன் ஒரு விவசாயி. தீபன் 10வது வகுப்பும் அவனது அக்கா க. பொ. உயர்தரமும் அவனது தம்பி சீலன் 8ம் வகுப்பும் படித்துக் கொண்டிருந்தனர் தீபனின் தந்தை உழைக்கும் வருமானத்திலிருந்து அவர்களது வாழ்க்கை என்னும் வண்டி உருண்டோடியது.

தீபனும் அவனது அக்காவும் படிப்பில் கெட்டிக்காரர்கள் இருவரும் படிப்பில் போட்டிபோட்டுக் கொண்டு படித்தனர். தான் படித்து டாக்டராக வேண்டும் என்று இளம் வயதிலிருந்தே தீபனின் அடிமனதில் ஆசை இருந்தது. அதே போல் தான் படித்து வக்கீலாக வேண்டும் என்று அவனது அக்காவின் ஆசை. ஆனால் தீபனின் ஆசை நிறைவேறாமல் விதியென்ற இரண்டெழுத்தும், வறுமை என்ற கொடிய அரக்கனும் அவனை எங்கோ தள்ளிச்சென்றன. இடையில் அவனது தந்தை நோயினால் பாதிக்கப்பட்டபோது

அவனுடைய படிப்பை தொடரமுடியாமலும் வறுமையாலும் அவர்களது குடும்பம் வறுமையால் வாடியது. இதனால் தீபன் தனது படிப்பை இடையில் நிறுத்திவிட்டு, தனது சித்தப்பா சுந்தரத்தின் மூலம் கொழும்பில் ஒரு தமிழ் கடையில் வேலை செய்தான். சுந்தரத்திற்கு ஒரு பெண் குழந்தை இரண்டு பையன்கள், ஆக மொத்தம் மூன்று குழந்தைகள். சுந்தரம், கணேசனின் ஒரே தம்பி சுந்தரம் என்றால் தீபனுக்கும் அவனது அக்காவுக்கும் ஒரே பிரியம்.

தீபனும் வேலைக்குச் சென்று மாதம் ஒன்றுகிற்று தனக்கு சம்பளம் 500 ரூபாயில் தீபன் 3.50 ரூபாவை வீட்டுக்கு அனுப்புவான் இடையே அவனது சிறிய தந்தை சுந்தரமும் உதவி செய்வார். நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி விருட்டென்ற எட்டி பிடிக்க நகர்ந்துக் கொண்டிருந்தன.

தீபனின் ஒரே நோக்கம் தான் தொடர்ந்து படிக்காவிட்டாலும் தனது அக்கா, தம்பி ஆகியோரை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்பதே. தீபனின் தந்தையும் நோயிலிருந்து மீண்டவராய், வாழ்க்கை என்னும் வண்டி சீராக ஓடி கொண்டிருப்பதை பார்த்து நிம்மதிப் பெருமூச்சு விட்டார். தீபன் தினது வழமையான வேலைகளை அன்றும் செய்தான். அங்கு தயாரிக்கப்பட்ட புடவைகளை எடுத்துச் சென்று கொழும்பில் இரண்டாம் குறுக்கு தெருவிலுள்ள கடைகளில் கொடுக்க வேண்டும் இப்படியாக இரவு 8 மணி வரை உழைப்பான். வழமை போல் அன்றும் கடை இரவு 8 மணிக்கு பூட்டப்பட்டது. அதே நேரம் டெலிபோன் மணியும் அலறியது. பேசிவிட்டு போனை வைத்த முதலாளியின் முகத்தில் அச்சத்தின் அடையாளங்கள் தென்பட்டன. சிறிது நேரத்துக்குப் பின்னர் அந்த அச்சத்திலிருந்து மீண்டார்.

''யாழ்ப்பாணத்துல 14 ஆமிக்காரங்கள் விடுதலைப் புலிகள் சுட்டுட்டாங்களாம் அதனால ஏதும் பிரச்சனை நடந்தாலும் நடக்கலாம் என்றார்.'' ஆம் விடுதலை புலிகளுடன் சண்டைபோட இயலாத இராணுவத்தினர் அப்பாவி தமிழர்களையும், குழந்தைகளையும் தானே சுட்டுக் கொல்கிறார்கள். அதனால்தான் அந்த அச்சம்.

தீபனும் மற்றவர்களும் சாப்பிட்டுவிட்டு படுக்கைக்குச் சென்றனர். அன்று தீபனுக்கு தூக்கம் வரவில்லை தனது அக்காவையும் தம்பியையும் படிக்க வைப்பது பற்றிய எண்ணமே அவன் சித்தப்பாவையும் நினைத்துக் கொண்டான் அவர் இவனுக்கு செய்யாத உதவிகளே இல்லை. ஒவ்வொரு நாளும் வந்து இவனை பார்த்துச்செல்வார். அவர் ஹோட்டல் ஒன்றின் மேனேஜராக வேலை செய்தார். இப்படியாக அடுத்த நாள் நடக்கப் போகும் கொடுமைகளை அறியாத எத்தனையோ உள்ளங்கள் பல கற்பனைகளை மனதில் சுமந்து கொண்டு நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்தனர். அவர்களில் தீபனும் ஒருவன்.

சரியாக 5-30 மணிக்கு அலாரம் அலறியது தீபன் இரண்டாம் குறுக்குத் தெருவுக்குப் போவதை கருத்தில் கொண்டு அவசரமாக எழும்பினான். அதே நேரம் கதிரவன் தனது செங்கதிர்களை பரப்பி அன்று நடக்கப் போகும் கொடுமைகளை பார்க்க மெல்ல வந்து கொண்டு இருந்தான் அவனது வரவையும், இலங்கை தமிழரெல்லாம் மறக்க முடியாத அந்த நாளையும், கணவனை இழந்த மனைவியும், தாயை இழந்த குழந்தையும், மகனை இழந்த தாயும் கதறி அழுத அந்த நாளையும், கன்னியரின் கற்பு சிங்கள காமவெறியனின் பசிக்கு இரையான அந்த நாளையும், சிங்கள காடையர்கள் மூட்டிய தீயில் வெந்து மடிந்த தமிழரின் உயிர், உடமைகளை பறிகொடுத்த அந்த நாளை ஈழ மறவர்கள் எம் சகோதரர்கள் குட்டிமணி, தங்கதுரை இன்னும் நமது சகோதரர்களை பேடி சிங்களவன் ஈட்டிக்கு இரையாகி விட்ட அந்த நாளை காக்கைகளும், குருவிகளும் இன்னோசை எழுப்பி வரவேற்றன.

தீபனும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு இரண்டாம் குறுக்குத் தெருவுக்கு போவதற்கு ஆயித்தமானான். அதே நேரம் ''தெமலோ'' ''மரணவா'' என்று கத்தியவாறு கடைகளை இடிக்கப்படும் ஓசை கேட்டது. உடனே தீபனும் மற்றவர்களும் பின்புறக் கதவு வழியாக உயிர் தப்புவதற்கு ஓடினார்கள். ஓடியவர்கள் சாக்கடை தண்ணீர் போகும் பாலத்தின் கீழ் ஒளிந்து கொண்டனர் ஆனாலும் தீபனின் நினைவு முழுவதும் தனது குடும்பத்தவர்களை பற்றியும் தனது சித்தப்பாவை பற்றியும் தான் இருந்தது அவர்களின் உயிருக்கு எவ்வித ஆபத்தும் வரக்கூடாது என இறைவனை வேண்டிக் கொண்டான்.

விதியென்ற இரண்டெழுத்தை யாரால் வெல்ல முடியும். எந்த சிங்களவனுக்கு தருமம் என்ற தமிழனுக்கே உள்ள இரக்க குணத்தில் சோறு போட்டாரோ அந்த சிங்களவனாலேயே அவனது சித்தப்பா ஈவு இரக்கமின்றி வெட்டிக் கொல்லப்பட்டார். அதேசமயம் தீபன் எந்த தாய் தந்தையரின் உயிர் பாதுகாக்கப்பட வேண்டும் என்று இறைவனிடம் வேண்டினானோ அவர்களின் உடல்கள் நுவரெலியாவில் சிங்களவர் மூட்டிய

தீயில் கருகிக் கொண்டிருந்தது. நாட்டைப் பாதுகாக்க வேண்டிய இராணுவத்தினர் சிங்களக் காடையர்களுடன் சேர்ந்து தமிழர்களின் உயிர்களேயும், உடமைகளேயும் தீயிட்டு கொழுத்திஞர்கள்,

தீபனும் மற்றவர்களும் இரவு 11-30 மணியளவில் ஒவ்வொருவராக பக்கத்தில் உள்ள நுகேகொட போலீஸ் நிலேயத்திற்கு சென்றனர். வழியில் அவர்களே பாதுகாக்க வேண்டிய இராணுவத்தினர் தாக்கிய விதம் கொடுமையிலும் கொடுமை. தீபனிடம் சிங்கள இராணுவத்தினர் ''அடோ ஒயா கொட்டிய நேத'' (அடே நீ புலி தானே) என்று கேட்டு தாக்கிஞர்கள் தீபன் அவர்களின் கைக்கு குரங்கு கையில் கிடைத்த பூமாலே ஆயிற்றுன் தீபன் அவர்களிடம் கெஞ்சிஞன். அதே நேரம் தீபனின் பின்புறமுள்ள ஆமிக்காரன் ''மெரனவா தெமிழே'' என்று துப்பாக்கியால் தீபனின் தலேயில் இடித்தான் சுயநினேவு இழந்தவஞக தீபன் அப்படியே வீதியில் விழுந்தான்.

சிறிது நேரத்திற்கு பின்னர் அவன் கண் திறந்து பார்க்கையில் தான் ஒரு காரில் செல்லுவதை கண்டு திடுக்கிட்டவஞக ''அய்யோ என்னே ஒன்றும் செய்யாதீர்கள்'' என்று அலறிஞன். அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு கிருஸ்தவ பாதிரியார் பயப்படாதே தம்பி எல்லாம் உனது நன்மைக்கு தான் என்ருர். பின்னர் நடந்தவற்றைக்கூறிஞர். அதற்கிடையில் கார் ''தெஸ்டன் காலேஜ் அகதி முகாமிற்கு வந்தடைந்தது. தீபன் மிகவும் நன்றி பெருக்குடனும், சிங்கள வெறியர்களிடமிருந்து உயிர் தப்பிய சந்தோஷத்துடனும் பாதிரியாருக்கு நன்றி சொன்ஞன்.

இரண்டு நாட்கள் கழிந்தன அது வரைக்கும் அவனது சித்தப்பாவை காணுத தீபனின் மனதில் அச்சம் ஏற்பட்டது. அவனது அச்சத்தை உறுதி செய்யும் பொருட்டு அவனது சித்தப்பா கடையில் வேலே செய்த ஒருவரின் மூலம் சிங்கள வெறியர்களிஞல் அவனுடைய சித்தப்பா கொலே செய்யப்பட்டதாக அறிந்தான். அவனுடைய கண்ணிலிருந்து நீர் அருவியாக கொட்டியது. அப்போதே அவனின் அடிமனதில் விடுதலே உணர்ச்சி உதிர்த்தெழ ஆரம்பித்தது. முதலில் அவனது பெற்ருேரையும் அக்காவையும் பார்க்க வேண்டும் போல் தோன்றியது. அன்றே அகதி முகாம் அதிகாரியின் அனுமதியுடன் வீட்டுக்கு செல்வதற்கு எல்லாவற்றையும் பறிகொடுத்தவஞக இரண்டு வாரங்களுக்கு முன் உடுத்திய சட்டையுடனும் சாரத்துடனும் பஸ் ஏறிஞன் அவன் சித்தப்பாவின் படுகொலே அவனின் மனதில் அலே மோத அவனுடைய பயணம் அமைந்தது. ஏழு மாதத்திற்கு முன்ஞல் அதே பஸ்சில்தான் அவனது சித்தப்பா அவனே கொழும்புக்கு அழைத்து வந்தார் வரும் போது ''நான் திரும்பி போகும் போது பாருங்கள் சித்தப்பா. ஒரு உயர்ந்த நிலேயில்தான் போவேன்'' என் அடிக்கடி இவன் சித்தப்பாவிடம் கூறுவான். ஆஞல் இன்று எல்லாவற்றையும் இழந்தவஞக பஸ்சில் செல்லுகிருன் பஸ்சும் சரியாக காலே ஆறு மணிக்கு நுவரெலியாவை அடைந்தது. பஸ்சை விட்டு இறங்கியவன் அங்கு சிதைந்து கிடக்கும் தமிழரின் கடைகளேப் பார்த்து பாவிகள் இங்கே கூயும் விட்டு வைக்கவில்லே போலும்''... என்று அவஞகவே சொல்லிக் கொண்டான். பின்பு அவனின் தாய் தந்தையை பார்க்கும் ஆவலில் வேகமாக நடந்தான்....

அவர்கள் படிக்கும்போது விளேயாண்ட அந்த இடங்களும், அவனின் தந்தை பயிர் செய்த நிலமும் இவனின் துன்பத்தில் பங்கு கொள்வது போல் மௌனம் சாதித்தன. அவனுடைய வீடு தீயில் கருகி இடிந்து கிடந்தது. நடந்தது என்னவென்று தெரியாது தீபன் கவலேயுடன் நின்ருன் அப்பொழுது அந்த வழியில் வந்த அந்த மாம்பழம் விற்கும் பாட்டிதான் சொன்ஞள் ......''தம்பி நீ இப்பதான் வாறீயா. ராசா நீ எப்படி ராசா உயிர்தப்பினே'' என்று கண்ணில் நீர் ததும்ப அவள் கேட்டாள். தீபன் தனது தாய் தந்தையரைப் பற்றி ''பாட்டி அம்மா அப்பாவெல்லாம் எங்க பாட்டி அக்காவையும் காணேும் தம்பியையும் காணேும்...!! என்ருன்''அவர்களாப்பா? நான் எப்படிச் சொல்வேன் ராசா அந்த கொடுமை காரங்க உங்க குடும்பத்தையே நாசம்பண்ணிட்டாங்களே'' தீபன் ஒன்றுமே புரியாது ''பாட்டி என்ன சொல்ற பாட்டி'' என்ருன் ஆம் ராசா உங்கள் குடும்பத்தையே அந்த காடையர்கள் தீ இட்டு அழித்திட்டாங்கப்பா இப்ப நீ என்ன இராசா செய்யபோரு? தீபனுக்கு தலே சுற்றுவதுபோல் இருந்தது, நடு வீதியில் நின்று கதறி அழுதான். அழுது என்ன புண்ணியம் அவர்கள் மீண்டும் வரவா போகிருர்கள் சிறிதாக எரியும் விடுதலே உணர்வில் மேலும் எண்ணெய் ஊற்றுவதுப்போல் இருந்தது அவனுக்கு. ஆடிப்பாடிய அந்த பூமியில் இப்பொழுது அடிச்சுவடே தெரியாமல் போயிற்று. அவன் புறப்பட்டான் ஆம் பல சோகக் கதைகளே சுமந்து கொண்டு விடுதலேயை நோக்கி புறப்பட்டான்.

## வீர உணர்ச்சி

மகனே வீறுடன் எழு
மானத்தை நிலை நாட்டு-என்ற
பெற்றதாயின் வீர உணர்ச்சியை
பெறவே இல்லை-அவன்

தலைநகரில் மூத்தவள்-அடிபட்டு
தலைகுனிந்து வந்தாளே
அப்போதும் தாய் சொன்னாள்
அய்யா துணிந்து விடு-துவக்கை ஏந்திவிடு
என்று:

அப்பனைப் போட்டு அடித்துப்புரட்டிய
ஆமிக்காரன் அட்டூழியத்தை
செத்தைக்குள் நின்று பார்த்தாயே-உன்
செந்நீர் இன்னுமா கொதிக்கவில்லை

தாய் அழவில்லை வெட்கினாள்
தன் வயிற்றில் பிறந்தானே-என்று
அவன் பிறந்தபோது அடைந்த இன்பம்
ஆண்மையில்லாதவன் என்பதை உணர்ந்த
போது.........

அந்தக் கடைசிநாளும் வந்தது-அவன்
அக்காளின் கருவறையில் இருந்து
சிங்கள மருமகன் சிரித்தபோது
ஓ! இவனின் அனுமதிக்காகத்தான்
காத்திருந்தயோ?

—துளசி

# விடுதலை இயக்கம் வளர்ந்த வரலாறு

**இணைப்பாட்சி :-**

காங்கிரஸில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து இரு சாராரும் தத்தம் கருத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் எடுத்து விளக்க முற்பட்டனர், தொடர்ந்து அரசை எதிர்த்து போராடி, இணைப்பாட்சியின் கீழ் தமிழ் இனத்தின் உரிமை பெறுவதே எமக்குள்ள ஒரே வழி என்று திரு. செல்வநாயகம் அவர்கள் பிரசாரம் செய்யத் தொடங்கினர். இந்த இயக்கத்தின் கால்கோள் விழா 13-02-1949 அன்று மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்றிலில் ஸ்ரீலஸ்ரீ. துரைச்சாமிக்குருக்கள் அவர்கள் ஆசி கூறித் திரு. செல்வநாயகம் அவர்களைத் தலைமை வகிக்கும்படி அழைக்க ஆரம்பமாயிற்று. கோப்பாய்ப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம் அவர்களும் மூதவை உறுப்பினர் டாக்டர் இ.மு.வி. நாகநாதன் அவர்களும் பேசிய இக்கூட்டத்தில் இளைஞர்களின் சார்பில் பேசும் வாய்ப்பு,அப்போது ஒரு சட்டமாணவனாக இருந்த திரு. அமிர்தலிங்கத்திற்கும் கிடைத்தது அன்றிலிருந்து தமிழ் மக்களின் அரசியலில் ஓர் புதிய சிந்தனை-ஈழத்தமிழன் ஒரு தனித்தேசிய இனம், அவனுக்கு ஓர் தனிப்பிரதேசம் உண்டு. அதை அவன் ஆளவேண்டும். அதன் பொருளாதாரத்தை விருத்தி செய்து தமிழன் வாழமுடியும். தென்னிலங்கையை நம்பி வாழமுடியாது வாழத்தேவையுமில்லை இப்புதுமையான கருத்துக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில், பட்டி தொட்டிகளிலும் பட்டினங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கின. கருத்துக்குக் கருத்து மாத்திரமல்ல. கல்மாரியும் கிடைத்தது பல இடங்களில் தமிழ் இனம் செல்ல வேண்டிய பாதை கல்லும் முள்ளும் நிறைந்தது. விஷஜந்துக்கள் நெளிவது, இரத்தமும் கண்ணீரும் சிந்த வேண்டியது என்பதை அந்த ஆரம்பக்கட்டத்தில் அனுபவத்தில் கண்டோம். ஆயினும் சளைக்காது பிரசாரம் வேகமாக நடைபெற்றது, வருங்காலத் திட்டங்களைத் தெளிவுபடுத்துவதற்கு, கொழும்பில் ஒவ்வொரு வியாழக்கிழமை இரவும் ஒவ்வோர் அன்பர் வீட்டில் கருத்துப் பரிமாறல் நடைபெற்றது. "Thursday Nights are Federal Nights" என்பது டாக்டர் நாகநாதன் அவர்களின் சுலோகம். டாக்டர் வி. கே. பரமநாயகம், டாக்டர் எம். திருவிளங்கம் திருவாளர்கள் பி. என் திரு. திருநாவுக்கரசு, பி. நல்ல சிவம்பிள்ளை வி. பொ. சி. முத்துகுமாரசாமி, எஸ். பி. வேலாயுதபிள்ளை வி. நவரத்தினம், எஸ். டி. சிவநாயகம், அருள் தியாகராசா முதலிய பலர் இவற்றில் கலந்துகொண்டு வந்தனர். பிரசாரத்திட்டங்களும் அங்கு கூறவேண்டிய அரசியல் கருத்துக்களும் எம் உள்ளங்களின் தெளிவுபெற்றன. ஒரே சிந்தனையுள்ள ஒரு குழு மெல்ல மெல்ல விரிவடைந்து வளர்ந்து வந்தது.



**நந்திக்கொடி :-**

யாழ்பாணத்தின் பல பாகங்களிலும் கூட்டங்களும், கருத்தரங்குகளும் நடைபெற்றது. திருகோணமலையில் 8-10-49இல் சக்திநிலைய ஆதரவில் முதற்கூட்டம் நடைபெற்றது. திரு. இராஜவரோதயம், திரு. இராமநாதன், திரு. பா. விஜெய

நாதன் முதலிய பலர் அங்கு இயக்கத்தில் உழைக்க முன்வந்தனர். மட்டக்களப்பில் திரு. ஆர். பி. கதிர்காமர், தலைமையில் அடுத்த மாதம்-முதற் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் ஈ. எல். தம்பிமுத்து, சாகுல் ஹமீது, செ. இராசதுரை, இராபத்மநாதன், பாலசுப்பிரமணியம் சித்தாண்டி நாகலிங்கம் சிவஞானம் ஆசிரியர், கனகசபை போன்ற பலரின் ஒத்துழைப்புடன் இயக்கம் அங்கு வளர்ச்சி பெறத் தொடங்கியது.

சங்கிலி மன்னனின் ஆட்சி 1619 ஆம் ஆண்டு அழிக்கப்பட்டபோது இறக்கப்பட்ட நந்திக்கொடி 3-9-49ல்-330 ஆண்டுகளின் பின் மீண்டும் நல்லூர் சங்கிலித்தோப்பில் உயர்த்தப்பட்டது. அங்கிருந்து நூற்றுக் கணக்கான தொண்டர்கள் அணி வகுத்து நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் வீதிக்குச் சென்றனர். வாலிபர்களின்கைகளில் நந்திக்கொடிகள் பறந்து கொண்டிருந்தன. திரு முத்துக்குமாரு எம்.ஏ. அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற இருந்தது. ஆனால் கூட்டமேடை மாற்றுக்கட்சியினரால் ஆக்கிரமிக்கப்பட்டது கூட்டம் பொலிசாரின் தலையீட்டினால் தடை செய்யப் பட்டதாயினும் பழந்தமிழ் இராசதானியில் மறைந்த தமிழ் அரசின் கொடி ஏற்றப்பட்ட அச்சம்பவம் இளைஞர்களின் உள்ளங்களில் ஓர் புதுக் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. தமிழரசு இயக்கத்தில் அது ஓர்முக்கிய படிக்கல்லாக அமைந்தது. அடுத்தநாள் நவாலியில் பண்டிதர் இளமுருகனார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆக்ரோஷத்தோடு ஆயிரக்கணக்கான மக்கள் பங்கு பெற்றனர்.

தமிழரசுக் கட்சியின் ஆரம்பம் :

பிளவுபட்ட தமிழ்க் காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்ட உறுப்பினர்களும் புதிய கருத்தினால் கவரப்பட்டு அரசியல் எழுச்சிப் பெற்ற இளைஞர் பலரும் 1949ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆந் தேதி காலை 9-30 மணிக்குமருதானை அரசாங்கலிகிதர் சேவைச் சங்கக் கட்டிடத்தில் கூடினர். கூட்டத்தின் அழைப்பாளர்களாக டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களும் திரு. கு. வன்னியசிங்கம் அவர்களும் பத்திரிக்கை மூலம் அழைப்பு விட்டிருந்தனர். டாக்டர் எம். திருவிளங்கம் அவர்கள் வரவேற்புக்குழுத் தலைவராகப் பணியாற்றினர்.



தமிழ்த் தந்தை செல்வா

திரு. செல்வநாயகம் அவர்கள் கூட்டத்தின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டதைத் தொடர்ந்து தமது தலைமைப் பேருரையைநிகழ்த்தினர். தலைவர் அவர்களே கீழ்க்காணும் தீர்மானத்தை முன் மொழிந்தார். "இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக உழைக்கும் தொண்டர்கள் 1949ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம்திகதி மருதானை அரசாங்க லிகிதர் சேவை சங்க கட்டிடத்தில் கூடியஇக்கூட்டம், நியாயமற்றதும்-பல மொழி பேசும் மக்களைக் கொண்ட நாட்டிற்கு ஏற்காததுமான இன்றையஒற்றையாட்சிஅமைப்பின்கீழ் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் மேன்மேலும் கீழான நிலைக்குத் தாழ்த்தப்படுவதை உணர்ந்து தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் சுதந்திரமும் சுயமரியாதையுமுள்ள பிரஜைகளாக வருங்காலத்தில் வாழ்வதற்குப் பாதகமான சட்டங்கள் ஆக்குவதையும், நிர்வாக நடவடிக்கைகள் ஆற்றுவதையும் மேற்கொண்டிருக்கும் இன்றைய அரசாங்கத்தின் கொள்கையின் நோக்கத்தையும் ஆபத்தையுமறிந்து நாட்டின் ஒற்றுமைக்குப் பாதகமற்ற முறையில்- இந்த அடிப்படைப் பிரச்சனைகளை நீதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் தீர்ப்பதற்கு ஒரே வழி ஐக்கிய இலங்கை சமஷ்டியின் ஓர் அங்கமாக இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சுயாட்சி அரசை நிறுவுவதே என்பதைத்

தெளிவாகக்கண்டு, இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியாக அமைந்து இந்நாட்டுத் தமிழ் பேசும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில்சுயாட்சி என்ற இலக்கை அடைவதற்கு இடையறாது உழைக்க உறுதி பூண்டு, **தமிழ் பேசும் மக்களின் தேசிய நிறுவனமாக இயங்குவதென்று தீர்மானிக்கிறது.**

கூடியிருந்த பிரதிநிதிகள் அத்தனை பேரும் ஏகமனதாக ஆர்ப்பரித்து ஆதரித்த இத் தீர்மானமே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தோற்றமாகும்.

**சோஷலிசமும் - தீண்டாமை ஒழிப்பும்**

தமிழரசு கட்சி நிறுவப்பட்டதைத் தொடர்ந்து அதன் நோக்கத்தையும் அடிப்படைக் கொள்கைகளையும் அமைப்புவிதிகளையும், மகாநாடு ஏற்றுக் கொண்டதுகட்சியின் வருங்காலப் போக்கை நிர்ணயிக்கும் வகையில் கட்சியின் பொருளாதாரக் கொள்கை பற்றி ஆரம்ப மகாநாட்டிலேயே காரசாரமான விவாதம் நடைபெற்றது. சோஷலிச-பொருளாதார முறையைக் கட்சி கைக்கொள் வேண்டுமென்று இளைஞர்கள் வற்புத்தினர், பெரியவர்கள் பலர் அதை எதிர்த்தனர். கடுமையான வாக்குவாதத்தின் பின் சோஷலிச - பொருளாதாரமுறை என்பதை ஏற்பதா? விடுவதா ? என்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது இருபக்கத்திற்கும் சமமான வாக்குகள் கிடைத்தன. **எப்போதும் இளைஞர்களின் போக்கிற்கு மதிப்பளிக்கும் தந்தை செல்வநாயகம் அவர்கள் தமது வாக்கைச்சோஷலிசத்தின்பக்கம் கொடுத்த காரணத்தினால்** கட்சியின் அடிப்படைக் கொள்கையாக :

**"சாதி, சமயம், இனம், ஆண்-பெண் என்ற அடிப்படையில் வேற்றுமை பாராட்டாது கல்வி, தொழில் முதலிய துறைகளில் சமசந்தர்ப்பமளிக்கும் சோஷலிஸிட்பொருளாதார முறையினை ஏற்படுத்தல்"** ஏற்றுக் கொள்ளப்பட்டது. சமூக உயர்வு தாழ்வுகளையும் தீண்டாமையையும் ஒழிப்பதும் சோஷலிஸிட் பொருளாதார முறையினை அமைப்பதும் என்ற அடிப்படைக் கொள்கைகள் பழமை விரும்பிகள் பலரைக் கட்சியிலிருந்து விலகிப்போகச் செய்தன. ஆரம்பத்தில் எம்மோடு ஒத்துழைத்த சிலர்இவற்றைக் கண்டதும் ஒதுங்கிக் கொண்டனர். சமுதாயத்தில் **புரையோடிய புண்ணை சாதியை ஒழித்து ஒரு புத்துயிர் பெற்ற - ஒன்றுபட்ட தமிழ் இனத்தை உருவாக்கி, அவர்களுக்கு ஒரு தாயகத்தையும், அத்தாயகத்தில் தம்மைத்தாமே ஆளும் உரிமையையும் நிலைநாட்டி, அங்கு சுரண்டல் ஒழிந்த சோஷலிச பொருளாதார அமைப்பை ஏற்படுத்தி, எல்லாத் தமிழ் பேசும் மக்களும் இன்ப வாழ்வு வாழ வழிவகுப்பதே-இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் குறிக்கோளென்று அன்றே உறுதியாகக் தீர்மானிக்கப்பெற்றது.**

சோல்பரி யாழ்பாண வருகை :-

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பித்து ஒரு மாதத்தில் களத்தில் குதிக்கும் வாய்ப்புக்கட்சி ஆதரவாளர்களுக்குக் கிடைத்தது.அநீதியான அரசியல் அமைப்பைச் சிபார்சுசெய்து. தமிழ் இனத்தை அடிமைகளாக்கிய சோல்பரி ஆணைக்குழுவின் தலைவர் சோல்பரிப்பிரபு - இலங்கையின் மகாதேசாதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். அவர் 1950ஆம் ஆண்டு தைமாதம் யாழ்பாணத்திற்கு வருகை தந்தார். தமிழினத்தின் வைரியை வரவேற்கார் என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு அவருடைய வருகையை பகிஷ்கரிக்குமாறு இலங்கைத் தமிழரசுக்கட்சி கோரியது.பகிஷ்கார நோக்கங்களை விளங்கும் பொருட்டு யாழ் நகர மண்டபத்தில் 22-1-50 ஆந்திகதி ஒருகூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது ஆட்சியாளரினதும்வேறுஅரசியற்சக்திகளினதும் தலையீட்டினால் நகரமண்டபத்தின் கூட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. கட்டணம் செலுத்தி வாடகைக்கு அமர்த்தப்பட்ட மண்டபம் கூட்டத்தன்று இரட்டை பூட்டுகள் போட்டுப் பூட்டப்பட்டிருந்தது.ஆயிரக்கணக்கில்திரண்டமக்கள்,பூட்டப்பட்ட கதவுகளையும்-அணிவகுத்து ஆயுதபாணிகளாக நின்ற போலீசாரையும் கண்டு திகைத்தனர். திடீரென்று, கட்சித் தொண்டர்கள் அங்கு தோன்றிக் கூட்டம் தனியாருக்குச் சொந்தமான ஒரு கராஜ் காணியில் நடைபெறும் என்று துண்டுப்பிரசாரங்களை விநியோகித்தனர். அக்காணியில் திரண்ட மக்கள் மத்தியில் ஒரு மேசை மீது நின்று தலைவர்கள் பேசினர். யாழ்ப்பாணம் முன் எப்போதும் காணாத புரட்சிகரமான

சூழ்நிலையில் கூட்டம் நடைபெற்றது. புதியதாகப் பிறந்த கட்சி என்ற குழந்தை தவழுவதற்கு முன்பே, ஆட்சியாளருக்குப் பெருந் தலையிடி கொடுக்கும் இயக்கமாக வளர்வதற்கான அறிகுறிகள் தோன்றின.

**சிங்கக்கொடி :-**

**1950** ஆம் ஆண்டு மாசிமாதத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தீர்வு பெறாதிருந்த தேசியக்கொடிப் பிரச்சனையில்பிரதமரால் நியமிக்கப்பட்ட குழு ஒரு முடிவுக்கு வந்தது சிங்கக் கொடியில் கம்பப் பக்கத்தில் சிறுபான்மைச் சமூகங்களைக் குறிப்பதற்குப் பச்சை-காவி நிறங்களில் இரு கோடுகள் சேர்க்கப்பட்டன. ''தமிழ் பேசும் சமூகம் புறக்கணிக்கப்பட்ட இரண்டாந்தரப் பிரஜைகளாகஇந்தநாட்டில் வாழ்கின்றனர்.என்பதைப் பிரகடனப்படுத்தும்ஒட்டுக் கொடி'' என்று இலங்கைத் தமிழரசுக்கட்சி அக்கொடிக்கு எதிராக தீவிர பிரசாரத்தை மேற்கொண்டது. ''இலங்கை வாழ் தமிழ் பேசும் இனம் இக்கொடியை முற்று முழுதாக நிராகரிக்கின்றது''. என்று தீர்மானித்தது. உணர்ச்சியுள்ள தமிழ்மக்கள் இன்றும் அக்கொடியை ஏற்க மறுக்கும் நிலை இருப்பதற்குக் காரணம் எமது இயக்கமேயாகும்.

**தமிழரசுக் கட்சியின் வளர்ச்சி :.**

இவ்வாரம்பக் கட்டத்தில் மலைநாட்டுத் தொழிற் சங்கங்களில் பலகாலம் பெரும்பங்கு கொண்டு உழைத்து வந்த **திரு. செ. வைத்தீஸ்வரன் அவர்களைக்** கட்சி தன் நிருவாகச் செயலாளராக பெற்றது. கட்சியின் அமைப்பு வேலையும் பிரசார இயக்கமும் வேகம் பெற்றன. மட்டக்களப்பு, திருக்கோணமலை வவுனியா, மன்னார். யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் மூலை முடுக்கெல்லாம் கட்சிப் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றன. கட்சிக் கிளைகள் கிராமந்தோறும் நிறுவப்பட்டு மாவட்டக் கிளைகளும் அமைக்கப்பெற்றன. கட்சியின் உபதலைவர்களில் ஒருவரான **டாக்டர் வி. கே. பரமநாயகம்** அவர்கள் இப்பணியில் பெரும் பங்கு கொண்டார்.

**கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றம் :-**


இந்தக்காலத்தில் பட்டிப்பளை ஆறு என்ற பாரம்பரியத் தமிழ் பெயர் கல்லோயாவாக மாற்றுப்பெற்று அங்கு சேனநாயக்கா சமுத்திரத்தைக்கட்டி அப்பள்ளத்தாக்கை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் கிழக்கு மாகாணத்திற்திற்கு பெரும் வரப்பிரசாதம் என்று பிரசாரம் செய்தனர் ஆட்சியாளர். ஆனால் அரசின் உண்மையான நோக்கத்தை அன்றே உணர்ந்து அப்பகுதி மக்களைத் தட்டியெழுப்பும் பொருட்டுத் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டது தமிழரசுக் கட்சி கல்முனை, சம்மாந்துறை போன்ற அப்பகுதிகளில் மக்கள் நெருங்கி வாழும் கிராமங்கள் எல்லாம் சென்று சிங்களக்குடியேற்றத்தின் ஆபத்தை விளக்கி 1950ஆம் ஆண்டு தொடக்கமே கட்சித்தலைவர்கள் பிரசாரம் செய்தனர். (தொடரும்)

# ஒலிக்கட்டும் உங்கள் குரல்!
# உதிக்கட்டும் தமிழீழம் !!

மீண்டும் ஒரு முறை தமிழகம் - தமிழினத்தின் தாயகம், ஒருமித்துதன் ஆதரவை, தமிழீழத்தில் அழிவை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் தன் சகோதரர்களுக்காக-ஒரே குரலில் தன் உணர்வினைப் பிரதி பலித்திருக்கிறது. நாற்பது லட்சம் உடன் பிறப்புகளுக்காக நாலரைக் கோடி மக்களும் தங்கள் ஆதரவைக் காட்டியுள்ளனர். நாதியற்ற நலிவடைந்த இனமாக ஈழத்திலே அல்லலுறும் தன் சகோதரர்களுக்கு தான்தான் ஒரே அடைக்கலமென உணர்ந்து தன் ஆதரவை அழுத்ததிருத்தமாக அனைத்துலகும் அறிய மீண்டும் கடையடைப்பு, ஹர்த்தால் மட்டுமல்லாமல் உண்ணா விரதமும் வெற்றிகரமாக நடாத்தி காட்டியுள்ளனர்.

பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அதன் சகோதர அரேபிய நாடுகள் பதினாறும் பண உதவி முதல் படை உதவி வரை அளித்த வண்ணமுள்ளன. சைப்பிரசில் துருக்கியரின் உரிமையை நிலைநாட்டுவதற்காக தன் படைகளையே அத்தீவில் இறக்கி சர்வதேச ரீதியின் அத்தனை எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் தடுமாறுமல் நிற்கிறது துருக்கிய நாடு.கிழக்குபாகிஸ்தான் தன்னுடைய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து மேற்குப் பாகிஸ்தானுக்கெதிராக போர்க்குரல் கொடுத்த போது கூடவே ஒலித்த உதவிக்குரல் மேற்கு வங்கத்தினுடையது. ''வங்காள தேசமக்கள்''

அகதிகளாக்கப்பட்டு அல்லல்பட்டு வந்த போது அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தது மட்டுமல்லாமல் ஒருபடி மேல் போய் தன்னுடைய போலிஸ் படையையே பாக்கிஸ்தான் இராணுவத்துடன் போரிட அனுப்ப முன்வந்தது - மேற்கு வங்கம் இவை எல்லாவற்றிற்கும் - அடிப்படைக் காரணம் நாமெல்லாம் ஒரே இனமக்கள் - ஒரு தாய வயிற்றுப் பிள்ளைகள் என்ற உணர்வே.



24-9-85 அன்று தமிழக அரசு நடத்திய உண்ணாவிரதத்தில்தமிழக முதல்வரும் அவர் கட்சியினரும்

இந்த உணர்வு, தமிழினம் அல்லலுறும் போது தாய்த் தமிழகத்திற்கு தோன்றுதல்- தங்கள் உணர்வை இந்திய அரசாங்கத்தின் மூலம் பிரதிபலிக்க வைக்க முயற்சித்தல் இயற்கையே. இன்று நேற்றல்ல சிங்கள பாசிச வாதிகளிடம் சிக்கி என்றென்றெல்லாம் ஈழத்தமிழனின் அவலக்குரல் ஒலிக்கிறதோ, என்றெல்லாம் அணைத்து, ஆறுதல் சொல்லவும், சிங்கள ஆட்சியை எச்சரிக்கவும் தமிழக மக்களும் அதன் தலைவர்களும் பின் நின்றதில்லை.

1958ம் ஆண்டில் முதல் முதலாக ஈழத் தமிழினத்திற்கெதிரான திட்டமிட்ட இனக்கலவரம் இலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்டது. ''ஐயகோ என் இனம் அழிகிறது. அங்கே'' என் கண்டனக் கூட்டம் நடத்தினர்-அறிஞர் அண்ணா. அன்று மெரினா கடற்கரையில் ஆர்ப்பரித்த கூட்டம் அலைகடலையும் விஞ்சியது.

ஆட்சிப் பொறுப்பில் இல்லாவிடினும் கூட எமக்காக மீண்டும் 1967ல் குரல் கொடுத்தார் அத்தலைவர்.

1974ல் நான்காவது உலகத்தமிழ் மாநாட்டில் தமிழின் சுவையைக் கேட்க்க கூடியிருந்த மக்கள் உயிரைச் சுவைத்தது, வெறி பிடித்த சிங்கள பொலிஸ். சிலபும்ச் செல்வர் மா. பொ. சி. தலைமையில் கவிஞர் கண்ணதாசன் முன்னிலையில் மாபெரும் கண்டன ஊர்வலமும், நினைவுச் சின்னம் அமைப்பும் இடம் பெற்றது.

1974ல் அன்றைய சிறீலங்காவின் பிரதம மந்திரி இந்தியா வந்த போது போலிஸ் கட்டுப்பாடுகளையும் மீறி தனி மனிதனாக நின்று கறுப்புக் கொடி காட்டினர்—இன்றும் ஈழத்தமிழனுக்காக உழைக்கும் டாக்டர் ஜனார்த்தனம்.

1977ல் வெடித்த ஓர் பெரிய இனக் கொலையை உலக நாட்டின் முன் கொண்டு வந்தது தமிழக மச்களின் ஆர்ப்பாட்டமும் தலைவர்களின் குரலும்.

1981ல் யாழ்ப்பாணத்தில் தமிழன் கொல்லப்பட்ட போது தமிழனின் அரிய பொக்கிஷமான யாழ் நூல் நிலையம் 97,000 புத்தகங்களுடன் தீயிடப்பட்ட போது 'யாரடா அது எங்கள் கலாச்சாரத்தை அழிப்பது' என அதட்டியது தமிழகம்.

1983ல் முன்னெப்போதும் கண்டிராத வகையில் இனக் கலவரம் ஈழத்தமிழினத்திற்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட போது கதறியழுதது தமிழகம். கலைஞர் கருணாநிதி பேராசிரியர் பதவி இராஜினாமா, அவர்கள் தலைமையில் ஆர்ப்பாட்டம்- பேரணி, நெடுமாறன் தலைமையில் இலங்கையை முற்றுகையிட்டே ஈழத்தமிழினத்தைக் காப்பாற்ற வேண்டும். என தியாகப் பயணம், தமிழக அரசே முன்னின்று நடத்திய ஓர் நாள் கடையடைப்பு- இப்படி எத்தனையோ! இதையெல்லாம் விட அன்று முதல் தொடங்கி இன்று வரை ஓயாமல் ஊர்வலங்களையும், கண்டனங்களையும் தெரிவித்து வரும் எம் அரும் தமிழக உடன் பிறப்புக்கள். அன்று முதல் இன்று வரை **ஈழத்தமிழினப் படுகொலைகளைக் கண்டித்தும், மத்திய அரசை தீவிரமாக தலையிட்டு இனப்பிரச்சனைக்கு ஓர் நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தும் படியும்** தமிழகத்தின் பட்டி தொட்டிகள் எல்லாம் நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.

எத்தனையோ திராவிட முன்னேற்றக் கழகக் கண்மணிகள் தங்கள் பொன்னுடலைத் தீயிலே புடம் போட்டு-இன்று ஊயிரை ஈந்து எங்கள் விடுதலை வேட்கையை வளர்த்துள்ளனர்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல அண்மையில் செப்டம்பர் 24ம் திகதி மீண்டும் அனைத்துக் கட்சிகளும் இணைந்து ஒரு நாள் பந்த் அனுஷ்டித்துள்ளனர். அதை விட அன்றைய தினம் தமிழ்நாட்டின் எல்லா இடங்களிலும் பல்வேறு கட்சிகளும் பேதங்களை மறந்து உண்ணாவிரதம் மேற்கொண்டனர்- மாநில ஆளும் கட்சியினர் அமைச்சர்கள், மத்திய அரசின் தலைவர்கள், அரச ஊழியர்கள், தனிப்பட்ட ஊழியர்கள். என எல்லா மக்களும் முழு உணர்வோடு தனி வேகத்தோடு பங்கேற்றனர். அன்று எந்தக் கடைகளுமே திறக்கப்படவில்லை. சென்னை மாநகரத் தெருக்கள் கூட வெறிச்சோடிக்கிடந்தன. ''இலங்கைத் தமிழர் புனர்வாழ்வு நிதி''க்கென வைக்கப்பட்ட உண்டியல்கள் நிரம்பி வழிந்தன. எதிர்பார்த்ததை விட எத்தனையோ மடங்கு அதிக வசூல் எம் சகோதரர்களின் அன்பின், அணைப்பின் பிரதிபலிப்பு.



24-9-85 காங்கிரஸ்(இ) உண்ணாவிரதமிருக்கின்றனர்

இவையெல்லாம் தமிழக மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பை. மத்திய அரசிற்கு எடுத்துக் காட்டுகிறது. **தமிழகத்தின் உள்ளக் குமுறலை, உணர்வின் வேட்கையை, உடன் பிறப்புகளுக்காக உருகுவதை மத்திய அரசு உணர்ந்து விரைவில்தமிழீழத்தின் விடிவிற்குஅந்த மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு வழி வகுத்துக்கொடுக்கும் எனநம்புவோமாக** இத்தீர்வுக்கு மத்திய அரசை முடுக்கும் உந்து சக்தியான தமிழக மக்களுக்கு மீண்டும் எம் நன்றிகள்.! ஒலிக்கட்டும் உங்கள் குரல் !! உதிக்கட்டும் தமிழீழம் !!!

**அரவிந்தன்.**

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

ஃஃ முன்னே குளக்கோட்டன் மூட்டும் திருப்பணியைப் பின்னே பறங்கி பிரிக்கவே - மின்னே கேள் பூனைக்கண் புகைக் கண் செங்கண்ணன் போய்மாறி மானே வடுகாய் விடும்.

திருக்கோணமலை கோட்டை வாயிலிலுள்ள கல்வெட்டு வாசகம் இது.

இதன்படி - இலங்கையை குளக்கோட்டன் எனும் தமிழ் மன்னனும் அவனைத் தொடர்ந்து பறங்கியரும் (போத்துக்கேயர்) ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும்- அவனிடம் இருந்த சிங்களவரும் ஆட்சி செலுத்தி மீண்டும் தமிழரே அரசு செய்வார்கள் என்பதேயாகும் இது திருக்கோணமலை கோனேஸ்வரர் ஆலயம் அமைக்கப்பட்ட கல்லில் இருந்ததாகவும் பின் போத்துக்கீசர்கள் கோயிலை இடித்து அக்கற்களால் கோட்டையை கட்டிய போது அக் கோட்டை வாயிலில் அமைக்கப்பட்டதாகவும் சரித்திரம் பகர்கிறது.

ஃஃஃ ஏன் ?

எந்த ஒரு சம்பவத்திற்கும் அறிக்கைகளை அள்ளி அடுக்கும் வேந்தர்களும், கவிஞர்களும், ஈழத்தமிழர்பிரதிநிதிகள் திருவாளர்கள் வி. தர்மலிங்கம், மு. ஆலாலசுந்தரம்ஆகியோர்படுகொலை செய்யப்பட்ட போது மட்டும் ஊமைகளாய் இருப்பது ஏன்?

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

# இலங்கை இனப்பிரச்சனையில் இந்திரா



இனி ஒரு போதும் நடக்கக் கூடாத செயல்கள் உலக அரங்கிலே தினம்தினம் நடப்பதை அறியமுடியும். அதே வேளையில் அதன் பின்னணிகளையும் நன்கு உணர முடிகிறது ...

அன்று 23-7-83 :

நீர்த்துளியாம் நிலமது இலங்கையிலே கொழும்பு எரிந்தது யாழ்நகர் தீக்கிரையானது நாடு முழுவதும் சொல்லொணா பதட்ட நிலை நிலவியது. அடக்கு முறைகட்கு அஞ்சிய ஆயிரமாயிரம் மக்கள் போக்கிடம் இன்றி புகலிடம் நாடி பல்வேறு மதத்தலங்கள், பள்ளிகள் ஏன் ? காடுகளையும், கடலையும் கடந்து அண்டை நாடுகளிலும் இடம் பெயரலானார்கள்.

பெறற்கரிய வாழ்வு பெற்ற மானிடர்க்குள்ளே எத்தனை மக்கள் குடிகொண்டு விட்டார்கள், மக்களின் நல்வாழ்வுதனை சீர்குலைக்கும் அக்காலடயர்களும், இலங்கை ஆயுதப் படையும் உயர் டண்பு கொண்ட தமிழனத்தையே பூண்டோடு அழித்து அல்லோல கல்லோலப் படுத்திக் கொண்டிருந்த வேளையில்,

ஓர் குரல் :

அமரரான அன்னை இந்திராவின் குரல், புகழ்ந்திட வார்த்தைகள் இல்லாமல் இன்று அவரின் அடிச்சுவடியைத் திருப்பாமல் இருக்கலாம் - அல்லது அவரது பணி முற்றுப் பெற்று விட்டதென்று மூடிவிட்ட பக்கங்களைப் புரட்டாமல் இருக்கலாம் - அன்றில் வரலாறாகிவிட்ட அவரது வார்த்தைகளை வரலாற்றோடு இணைத்துவிட்டு புதிய நோக்கினை எதிர் கொள்வதாயும் இருக்கலாம். அவரது அதிதீவிர அணுகுமுறையினை நினைவு கூறாமல் இருக்கவும் இயலுமோ?

1983 ஜூலைக் கலவரத்தின் கொடுமைகளையும் அதன் பின்னணியில் இருக்கும் தாக்கத்தையும் அறிந்த அன்னை, தாமதமின்றி அன்றைய வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவை கொழும்பிற்கு அனுப்பி அங்கே நடந்த இனப்படுகொலைகளை கண்டித்தும், மீண்டும் தொடர விடாமல் நிறுத்திடவும் செய்தார்.

எரிந்து கொண்டிருந்த தணலில் தண்ணீரை நாடியது, போக்கிடம் இன்றி அலைந்தோர் அகதி முகாம்களிலே அடைக்கப்பட்டனர், கொன்று குவிக்கப்பட்ட மக்களுக்கிடையே மிஞ்சியோரை பயங்கரவாதிகள் என்ற பெயரில் சிறையில் அடைத்தனர்.

நிலைமைகள் ஒருவாறுக கட்டுக்குள் வந்ததாக இலங்கை வெளிவிவகாரத்துறை அமைச்சு, அறிவிப்பு வெளியிட்டது. திரு. பி. வி. நரசிம்மராவ் டெல்லி திரும்பினார். நிலைமைகளை அறிந்த அன்னை அதிர்ச்சிக்குள்ளானது மட்டுமல்லாமல், உடனடியாக எண்களை சுழற்றி சர்வாதிகார பாசிச ஏஜண்ட் ஜெயவர்த்தனவுடன் விளக்க உரையாற்றினார்.

பதிலளிக்கப் திணறிப்போன ஜெயவர்த்தன, அரச பிரதிநிதிகளை நேரில் அனுப்புவதாக கூறிவைத்தார். இந்திராவின் இத்தனை வேகத்திற்கும் உற்சாகத்திற்கும் அடித்தளமாக அமைந்தது. அவ்வேளையில் தமிழகத்தில் ஏற்பட்ட உணர்ச்சிப் பெருக்குதான்.

தமிழகமே தன் நிலை மறந்து கொதித்தது. மாணவர்கள், அரசியல்வாதிகள், அரசு அலுவலர்கள் என அனைத்து பிரிவினரும் தத்தம் எதிர்ப்புதனை ஊர்வலம், உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், ஆர்ப்பறிப்பு என அத்தனை வழிகளிலும் டெல்லிக்கு எடுத்துரைத்தார்கள்.

தமிழ் மக்களின் உணர்வை மதிக்கும் வகையில், இந்திய அரசின் சார்பில் திரு. ஜி. பார்த்த சாரதி சிறப்புத் தூதுவராக இலங்கை இனப்பிரச்சனை குறித்து ஆலோசனை செய்ய அனுப்பிவைக்கப்பட்டார்.

அனைத்து இந்திய செய்தித் தொடர்புச்சாதனங்களும் இலங்கை அரசின்அராஜகத்திற்கு எதிராக குரல் கொடுத்தன. உலகம் முழுவதும் இலங்கையில் தமிழன் படும் இன்னலும், கொடுமைகளும் பரவியது ... அதனை தொடர்ந்து பாசிச இனவெறி ஆதரவு அரசாங்கங்கள் கூட அக்கொடுமைகளைக் கண்டிக்கும் நிலை வந்தது,

இத்தகைய இடர்பாடான சூழ்நிலையில் இந்திரா தன்பங்கை செல்வனே செய்யத் துவங்கி வெகு விரைவாக செயல் படுத்தத் துவங்கினார். உலக அரங்கின் போர் மற்றும் இராஜ தந்திரங்களை மிக நுணுக்கமாக அறிந்திருந்ததால் பதட்டப்படாமல், இலங்கையில் நடக்கும் செயல்களை உன்னிப்பாக கவனிக்கலானார்.

அன்று தொடங்கி மற்ற நாட்டு அரசுகளுக்கும், இலங்கையின் இரு வேறுபட்ட இனங்களுக்கிடையில் உள்ள பிணக்குகளைப் பேதங்களைத் தெளிவுபடுத்தினார். இந்தியாவின் நிலை அறிந்த ஏனைய நாடுகளெல்லாம் இப்பிரச்சனையில் சற்று விலகியே நின்றது ஏன்? பாசிச தலைமையகம் அமெரிக்காவும் சிந்திக்க தொடங்கி விட்டது அடுத்த பக்கத்தில் ரஷியா இந்தியாவின் அனைத்து முயற்சிகளுக்கும் ஆதரவு தெரிவித்துக் கொண்டிருந்தது. இந்நிலை தொடர்கையில்.........

1982 ஆம் ஆண்டு தொடங்கி தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆளும் சிங்கள அரசுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் பயனளிக்காது என்று ஒதுங்கிய வேளையில்......

"பேச்சு வார்த்தையின் போர்வையில்தான் இலங்கைத் தமிழரின் பிரச்சனையை சுமுகமாக தீர்த்து வைக்க முடியுமென முடிவு செய்த அன்னை, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பொருப்பாளர்களான திரு அ. அமிர்தலிங்கம், திரு சிவ. சிதம்பரம் மற்றும் பல்வேறு அரசியல் பிரிவு பிரதிநிதிகளையும் அழைத்து பிரச்சனையின் முழு நிலைமைகளைக் கேட்டறிந்தும், தனது எதிர்காலத் திட்டங்களை விளக்கியும்-சிங்கள அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்திட ஏற்பாடு செய்தார்.

ஒருபுறம் பேச்சு வார்த்தைகள் இந்திய உயர்மட்ட ஆலோசகர்களின் ஒத்துழைப் போடு நடந்து கொண்டிருக்கையில், எமது பிரச்சனைக்கு ஆயுதமே தீர்வு சொல்லும் என இளைஞர்கள் ஆயுதங்களை நண்பர்களாக்கிக் கொண்டிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்திற்கு அவ்வேளையிலே சென்ற அன்னை தன்னுடன் 15 பேர் கொண்ட குழுவினரையும் அழைத்துச் சென்று, தமிழக அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் தலைமையில் இலங்கைத் தமிழர்களின் நிலையை எடுத்தியம்பிடச் செய்தார்.

டெல்லியிலே கூடிய அணிசேரா நாடுகளின் பொது அவையிலும் இலங்கைத் தமிழரின் நிலை குறித்து விவாதிக்க ஏற்பாடு செய்தார். அவ்வகையால் பல முனைகளிலும் தன் பரந்துபட்ட செல்வாக்கையும் தன்னிகரற்ற சமயோசித ஆற்றலையும் பயன்படுத்தி இலங்கையிலே தமிழன் தலைநிமிர்த்தி வாழ்ந்திட வழிகள் கண்டார்.

அவரது சுற்றுப்பயணங்களும் மேடைப் பேச்சுக்களும் இலங்கைத் தமிழனின் அவல நிலைகளை எடுத்துரைக்கத் தவறியதில்லை.

8-8-84 அன்று இந்திய பாராளுமன்ற கட்டிடத்தில் நிகழ்த்திய உரையினை இங்கே நினைவு கூறுதல் பொருத்தம்.

''நாம் இலங்கைத் தமிழருக்கு உதவும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டுமே தவிர அவர்கள் அழிவைத் தூண்டும் விதத்தில் நடந்து கொள்ளக் கூடாது. பிற நாடு ஒன்றின் உள் விவகாரத்தில் இந்தியா தலையிடுவது என்ற பிரச்சனைக்கே இடம் கிடையாது அங்கு நிலமை சீரடைய இந்தியா தன் நல்லெண்ண முயற்சியை உதவியதே தவிர வேறு அல்ல. அதனால் நல்ல பலனும் ஏற்படாது. இலங்கை அரசிற்கு சில யோசனைகளை இந்தியா உதவியது அவ்வளவுதான்.

**இலங்கைப் பிரச்சனைக்கு காணப்பட வேண்டிய அரசியல் தீர்வு இந்தியாவிற்கு திருப்தி அளிப்பதாக இருக்கத் தேவையில்லை. அங்கு வாழும் தமிழ் மக்களுக்கும் மற்றவர்களுக்கும் திருப்தி அளிப்பதாக அது இருத்தல் வேண்டும்.** இலங்கையின் உள் விவகாரத்தில் தலையிடாது, அதன் உள்நாட்டுப் பிரச்சனை தீர உதவவே இந்தியா விரும்புகிறது. இதற்கு முன்பு தேவைப்பட்ட போதெல்லாம் இந்தியாவின் உதவியை இலங்கை கோரிப்பெற்று வந்திருக்கின்றது ஆனால் இந்த முறை வேறு நாடுகளின், முக்கியமாக பிரிட்டன் மற்றும் இஸ்ரேலின் உதவியை நாடியுள்ளது. இந்த விதமாக இலங்கை நடந்திருப்பது நமக்கு கவலை அளிப்பதாக உள்ளது. இலங்கையில் நடக்கும் கொடுமை பற்றி மட்டும் நாம் கவலை கொள்ள வில்லை. அதன் காரணமாக இந்தியாவில் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றியும் நாம் கவலை கொள்ள வேண்டியுள்ளது. ஏற்கனவே அந்நாட்டில் இருந்து 40 ஆயிரம் தமிழர்கள் இந்தியாவிற்கு அகதிகளாக வந்துள்ளனர் இந்தியா இல்ங்கையில் இராணுவ நடவடிக்கை எதையும் தூண்டவில்லை. பயங்கர வாதத்தையும் இந்தியா ஆதரிக்கவில்லை. என்பதை நாம் ஏற்கனவே இலங்கை அரசிற்கு தெளிவு படுத்தியுள்ளோம். பயங்கரவாதம் மூலம் எந்த ஒரு பிரச்சனையும் தீர்த்து விட முடியாது.

பௌத்தம் இலங்கை அரசின் ஆதார பூர்வமதம், அன்பையும் அமைதியையும் போதிக்கும் மதம், அம்மதத்தை பின்பற்றுபவர்கள் புத்தரின் போதனைக்கு நேர்மாறாக நடந்து வருவது எனக்கு மனவேதனையை அளிப்பதாக உள்ளது''. மேலும் சுதந்திர தின விழா (15-8-84ல்) செங்கோட்டையின் உச்சியில் இறுதியாக உரையாற்றும் போது இலங்கை நிலை குறித்து பின்வருமாறு குறிப்பிட்டார்.

''இலங்கையில் அப்பாவி மக்கள் தாக்கப்படுவது குறித்து ஆழ்ந்த கவலைப்படுகிறேன். இலங்கை அரசிற்கு தீவிரவாதிகள் பிரச்சனை உள்ளது. இந்த அபாயத்தை எந்த ஒரு நாட்டின் அரசும் தீர்க்கவே முயற்சி செய்யும். ஆனால் இலங்கையில் ஒரு குறிப்பிட்ட இன மக்கள் மீது இப்போதும் தொடர்ந்து தாக்குதல் நடந்து வருகிறது.

இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவிடம் சிறுபான்மை தமிழர்களின் பிரச்சனைக்கு தீர்வு காணும் படி வற்புறுத்தினேன். ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கை நிலையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஒவ்வொரு நாளும் பத்திரிக்கைகளில் இலங்கைத் தமிழர்களின் துயர சம்பவங்கள் வெளியாகி வருகின்றன.

இந்தியா இலங்கையில் பிரச்சனையை ஏற்படுத்த விரும்பவில்லை ஆனால் இப்பகுதியில் நிலைத்தன்மை இருப்பதையே விரும்புகிறது. இந்தியாவில் வாழும் மக்கள் குறிப்பாக தமிழர்கள், இலங்கைத்தமிழர்கள் நிலைகண்டு கவலைப்படுகிறார்கள் அவர்களுக்காக தமிழகமக்கள் அனுதாபப்படுகிறார்கள் இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் ஒருவகையில்இந்தியாவிற்குப் பிரச்சனை ஏற்படுத்தியுள்ளது,......

... ... இது ஒரு மிகவும் சிக்கலான பிரச்சனை. இதனால் நாம் இந்த பிரச்சனையை மிகவும் ஜாக்கிரதையாக அணுகவேண்டும். இந்த விவகாரமும் பஞ்சாப் விவகாரமும் ஒரே விதமானவை அல்ல- நாம் இவ்விவகாரத்தில் உணர்ச்சிவசப்படக் கூடாது, நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். நாம் செய்யும் காரியங்களினால் அங்குள்ள மக்களின் நிலை மேலும் மோசமடையச் செய்யக் கூடாது.

நாம் இவ்விவகாரத்தில் என்ன செய்யலாம் என்பது பற்றி எதுவும் கூறுவது அவ்வளவு எளிதல்ல. நாம் எல்லோரும் என்ன செய்யலாம் என்பது குறித்து கலந்து ஆலோசிக்க வேண்டும். ......''

எத்தனையோ நிலைகளில் இலங்கைத் தமிழர் பிரச்சனையை தீர்த்திட வழிவகுத்திட்ட அன்னைக்கு அதுமட்டுமா பிரச்சனை இந்தியாவில் மாநிலந்தோறும். பிரச்சனை, அண்டை நாடுகளுக்கிடையேயும் பிரச்சனை. அந்த வகையால் தமிழினப் பிரச்சனையை தீர்த்து வைப்பதில் எடுத்துக்கொண்ட முயற்சிகள் 31-10- 84 அன்று நிரந்தர வழிகாட்டியின்றி தடைப்பட்டு விட்டது. அன்று அன்னை இந்திரா மீது துளைத்த குண்டுகள் அனைத்து ஈழத் தமிழர் நெஞ்சினிலும் உதிரம் கொட்ட வைத்து விட்டது.

இந்திய மக்களும் தமிழீழ மக்களும் கண்ணீர்க்கடலில் மூழ்கியது இன்றும் பசுமையாய் நிற்கிறது. அன்னையில்லா குறையினால் இன்று தமிழினப் பிரச்சனை எத்திக்கில் செல்கிறது என கணக்கமுடியவில்லை. எவ்வாறாயினும் மதிப்புமிகு ஐயா அமிர்தலிங்கம் அடிக்கடி கூறுவது போல 'அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்' என்பதற்கிணைய,

அன்னை இந்திராவின் பாதையில் எமது பிரச்சனையை ஒருமுகப்படுத்தி வெகு விரைவில் சம சமூக அரசியல்- பொருளாதாரத்தில் பாதிப்பற்ற நிலையில் இலங்கை இனப்பிரச்சனையில் தீர்வு ஒன்றை எட்டிட பாடுபடுவோம் !

வெல்க தமிழீழ விடுதலைப் போராட்டம்
மலரட்டும் தமிழீழம்

**பாஞ். இராமலிங்கம்**

தமிழ் ஈழ நட்புறவுக்கழகம்

புதுச்சேரி.


---

**அன்னை இந்திராவுக்கு முதலாமாண்டு நினைவஞ்சலி**

---

# கிழக்கு மாகாணம் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசமே

1963ல் சிங்களக் குடியேற்றத்தின் விளைவாக கிழக்கு மாகாணத்தின் தென்பகுதி அம்பாறை மாவட்டமாகத் தனித்துக் கூறுக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம் இன்றும் பெரும்பான்மையாகத் தமிழ் பேசும் மக்களையே கொண்டுள்ளது. ஏனெனில் இங்கு வாழும் முஸ்லிம் மக்கள் தமிழையே தம் தாய் மொழியாகக் கொண்டவர்கள். இம்மாவட்டத்தில் இவர்கள் எண்ணிக்கையில் சிங்களவர்கள் குடியேற்றப்படுவதற்கு முன்பும் பின்பும் கிழக்கு மாகாணத்தில் இனவாரியான சனத்தொகைப்பரம்பல் எவ்வாறு அமைந்துள்ளது என்பதனைக் காட்டும் பட்டியல் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. குடியேற்றத்திட்டம் என்ற போர்வையில் பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ்ப் பெரும்பான்மையை இல்லாதொழிக்க சிங்கள அரசுகள் மேற்கொண்ட இடங்களை இப்பட்டியல் பேசுகிறது.




இலங்கையில் தேசியப்பற்று என்பது எவ்வளவிற்குத் தேசியமாக இருந்ததோ அவ்வளவிற்கு அது இனவாதமாகவும் திகழ்ந்தது நாட்டின் முக்கிய நலன் என்பது குடிமக்களின் ஒரு குறிக்கப்பட்ட பிரிவினரின் நலனோடு மட்டுமே இணைத்து நோக்கப்பட்டது. ஆகவே தான் 1928ல் இலங்கையின் அரசியல் நிலையை ஆராய்ந்த டொனமூர் ஆணைக்குழு பின்வருமாறு கூறியது.

''மக்கள் ஒரு தனித்த இனத்தைமட்டும் சார்ந்தவர்கள் அல்லர் அதுமட்டுமல்ல, மக்களின் வெவ்வேறு இனப்பிரிவினரும் நம்பிக்கையீனம் கொண்டவர்களாகவும் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் ஐயுறவு கொண்டவர்களாகவும் உள்ளனர். இலங்கையில் தேசியப்பற்று என்ற கருத்தோட்டமானது எவ்வளவிற்குத் தேசியமோ அவ்வளவிற்கு இனரீதியானது என்பதும், சில சமயங்களில் நாட்டின் முக்கிய நலன் என்பது அதன் மக்களின் ஒரு குறிக்கப்பட்டபகுதியினரின் நலனுகவே கருதப்படுகிறது என்று கூறப்படுவதும் பெருமளவில் உண்மையேயாகும். (பெரிய பிரித்தானியா, குடியேற்ற அலுவலகம், இலங்கை யாப்பு மீதான சிறப்பு ஆணைக்குழுவின் அறிக்கை)

இதனை அடுத்து சோல்பரி ஆணைக்குழு அறிக்கை (இலங்கை அரசியலமைப்பு சீர்திருத்தம் பற்றிய ஆணைக்குழுவின் அறிக்கை) பின் வருமாறு கூறியது.

''அரசியல் பிரச்சனைகள் எழும்போது மக்கள் பொருளாதார, சமூகப் பிரச்சனைகளின் அடிப்படையில் இல்லாமல் இனரீதியான அடிப்படைகளிலேயே பிரிந்து செயற்படுகின்ற போக்கு காணப்படுகிறது. ஆனால் மேற்கு நாடுகளில் குறிக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்த தனிநபர்களை இத்தகைய பொருளாதார, சமூகப் பிரச்சனைகள் சாதாரணமாக ஒன்றுபடுத்தி வைக்கின்றன. இந்தக்காரணி தான் இலங்கையில் மேற்கத்திய ஜனநாயகக் கோட்பாடுகளைப் பிரயோகிப்பதில் சிக்கல்களை ஏற்படுத்துகிறது.''

எனினும், இந்த அறிக்கையானது சிறுபான்மை இனத்தவருக்குப் போதுமான பாதுகாப்பை சிபார்சு செய்வதில் தவறிழைத்திருப்பதை அரசியலமைப்பு பிரதிபலிக்கிறது. சோல்பரி பிரபு தனது குழுவினுடைய ஆய்விலும் தான் சிபார்சு

செய்த அரசியல் அமைப்பிலும் ஏற்பட்ட தவறுகள் பற்றித் தனிப்பட்ட முறையிலும் பகிரங்கமாகவும் பலமுறை ஒத்துக் கொண்டிருக்கிறார்.

B. H. ஃபாமர் எழுதிய "இலங்கை. ஒரு பிளவுபட்ட தேசம்" என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில் சோல்பரி பிரபு பின்வருமாறு குறிப்பிட்டார்.

"இரண்டு சமூகங்களுக்குமிடையே காலங் காலமாகக் காணப்படும் பகைமை பற்றி ஆணைக்குழு அறிந்திருந்தது என்பது உண்மையே. ஆனால், நூற்றாண்டுக்கணக்கான குழப்பங்கள் மலிந்த ஒரு சரித்திரம் இன்றைய இலங்கையின் மீது ஏற்படுத்தியுள்ள வருந்தத்தக்க விளைவுகளைக் கோடிட்டுக் காட்டும் திரு ஃப்பாமரின் புத்தகம் அப்போது எங்களுக்குக் கிடைத்திருக்குமானால் இப்பிரச்சனைக்கு அவ்வளவு சுலபத்தில் தீர்வு கண்டுவிட முடியும் என்பதில் பெருத்த நம்பிக்கை கொண்டிருந்திருக்க மாட்டேன். இன்று அதன் விளைவுகள் எனக்கு ஒரு கசப்பான அதிருப்தியையே ஏற்படுத்தியுள்ளன என்பதை நான் சொல்லி காட்டுவதும் அவசியமில்லை."

இதனையடுத்து பேராசிரியர் சி. சுந்தரலிங்கத்திற்கு எழுதிய கடிதத்திலும் சோல்பரி பிரபு வருத்தம் தெரிவிக்கிறார்.

"நான் சிபாரிசு செய்த அரசியல் அமைப்பில் சிறுபான்மை இனத்தவருக்கு பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று தான் எனக்கு அப்போது பட்டது. 29ம் ஷரத்து நான் எதிர்பார்த்த அளவு பயன் தரவில்லை. இந்திய அரசியல் அமைப்பிலும் வேறு இடங்களிலும் காணப்படுவது போல மனித உரிமைகள் ஷரத்தினையும் சேர்த்து நான் சிபார்சு செய்திருந்தால் நல்லாயிருந் திருக்கும் என நம்புகிறேன்"

(ஈழம்: சுதந்திரப் போராட்டங்களின் தொடக்கமும் சோல்பரிப்பிரபுவின் நேர்மையான விளக்கங்களும் விமர்சனங்களும்)

திட்டவட்டமாக இத்தகைய மனிதாபிமான அடிப்படையில்தான் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த கிழக்கு மாகாண மக்களாகிய நாம் கிழக்கு மாகாணத்தின் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசம் பற்றிய பிரச்சனை பேச்சு வார்த்தைகளின் போது விவாதிக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம்: பண்டாரி கூறுவது போல வெறும் கையசைப்பின் மூலம் அது நிராகரிக்கப்படக் கூடியதல்ல.

சிங்கள இனவாத அரசியல் வாதிகளால் திட்டமிடப்பட்டு திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களால் ஏற்படுத்தப்பட்ட இனக் கலவரங்களின் அநுபவங்களிலிருந்து தான் இந்த மனிதாபிமான அம்சத்தை நாம் வலியுறுத்துகிறோம். இக்கலவரங்களின் மோசமான அழிவுகளை இப்பிரதேசங்களில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் ஏழைத்தமிழ் மக்களே அநுபவித்து வருகின்றனர் அதிலும் யானை-புலி வேட்டை நடைபெற்று வரும் இன்றைய கட்டத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் பாரம்பரியத் தமிழ் மண்ணில் வாழும் தமிழ் மக்களை இல்லாதொழிப்பதிலும் இழிவு படுத்துவதிலும் அரசபடைகளும் கைகோர்த்துச் செயற்பட்டு வருகின்றன. இந்தக் கசப்பான அநுபவங்களால் தான் கிழக்கு மாகாணத் தமிழர்களாகிய நாங்கள் கிழக்கில் சிங்களக் குடியேற்றம் உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்றும், எமது பாரம்பரிய மண்ணை தமிழர்களாகிய நாங்களே நிர்வகிக்க வேண்டும் என்றும் திட்டவட்டமாக வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

இனக்கலவரங்களின் அடிப்படையான காரணம் தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் தானென்பது டார்ஸி வித்தாச்சி போன்ற சிங்கள நூலாசிரியர்களே ஏற்றுக் கொண்ட முடிவாகும். "அவசர காலச் சட்டம்: இலங்கையின் இனக்கலவரத்தின் கதை" என்ற நூலில் "ஏன் இப்படி நடந்தது?" என்று கேள்வி எழுப்பி அவரே பதில் கூறுகிறார்.

"மீண்டும் மீண்டும் நெஞ்சைத் துளைக்கும் கேள்விகள் இவை: இந்த இனக்கலவரங்களுக்கு ஏது காரணமாயிருந்தது? அவை ஏற்கனவே திட்டமிடப்பட்டு நடந்தனவா?

அல்லது யார் தூண்டுதலோ வழி காட்டலோ இல்லாமல் தன்னிச்சையாக வெடித்ததா?

''முதலாவது கேள்விக்குச் சுருக்கமான பதில் : 1958 கலவரங்களுக்கு அப்பாற்பட்ட காலம், சூழ்நிலைகள், நிகழ்ச்சிகள் என்பவற்றில் இந்த இனக்கலவரங்களுக்கான காரணத்தைக் காண வேண்டும். ''கலவரங்கள் திட்டமிடப்பட்டு நடந்தனவா ? அல்லது தானுக வேடிந்ததா?'' என்ற இரண்டாவது கேள்விக்குச் சுருக்கமான பதிலை இந்த இரண்டு விளக்கங்களுக்கு இடையில் தான் எங்கோ காண வேண்டும்.''

(தொடரும்)

# கொழும்பிலிருந்து திம்புவரை............ I

இலங்கையில் தமிழினம் 350 ஆண்டுகளுக்கு மேலாகவே அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. போர்துக்கேயன் யாழ்ப்பாண அரசை, சங்கலி மன்னனை போரில் தோற்க்கும் வரையிலும் அதன் பின் சுமார் 200 ஆண்டுகளுக்குப் பின் ஆங்கிலேயன் வன்னி அரசை, பண்டாரவன்னிய மன்னனைப் போரில் தோற்கடிக்கும் வரை தமிழினம் சுதந்திர அரசு வைத்து ஆண்டு வந்திருக்கிறது.

சிங்களவரின் பாரம்பரியப் பிரதேசமாகக் கணிக்கப்பட்ட கண்டி மாநிலத்தின் அதன் அரசின், கடைசி மன்னன், கண்ணுச் சாமி என்ற தமிழ்மன்னன். அங்கு கூட ஆட்சியில், நிர்வாகத்தில், ஒப்பந்தங்களில் தமிழ் அரசோட்சியிருக்கிறது. 19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் அதுவும் யாழ்பாண அரசும், வன்னியரசும் போரில் தோற்கடிக்கப்பட்ட பின்னரே கண்டி அரசையும் ஆங்கிலேயர் போரில் கைப்பற்றினூர்கள்

இலங்கையை தமிழரும் சிங்களவரும் மாறி மாறி ஆண்டார்கள், என்பதொருபுறமிருக்க இலங்கையின் தென்பகுதிகளில் சிங்கள அரசுகளும் வடபகுதியில் தமிழரசுகளும் இருந்து வந்துள்ளன என்பது வரலாருகும். வரலாற்றுக்கு முற்பட்ட செய்திகளை ஆராயும் நோக்கம் இப்பொழுது இக் கட்டுரைக்கு இல்லை. 1833ல் ஆங்கில ஏகாதிபத்தியம் தங்கள் நிர்வாக வசதிக்காக சிங்களர் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களையும், தமிழர் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்களையும் ஒன்ருக இணைக்கும் வரை சுதந்திரத்தமிழரசுகளும் மறுபக்கத்தில் சுதந்திர சிங்கள அரசுகளும் தனித்தனியாக இருந்திருக்கின்றன என்பதனையே நிலை நாட்டுகின்றேம்.

இந்த அடித்தளத்தை மையமாகக் கொண்டு தான் 1948ல் தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்ட பொழுது, அதன் கொள்கைத்திட்டமும்வேலைத்திட்டமும் வகுக்கப்பட்டது. அத்துடன் இலங்கையின் புவியியல் தன்மை, அரசியல் சூழல், சர்வ தேச நிலைப்பாடுகள் இவற்றினையும் கருத்திற் கொண்டு, தமிழர் தாயகத்தில் தமிழரசும், சிங்களவர் தாயகத்தில் சிங்கள அரசும் மத்தியில் இணைப்பாட்சியும் (Federal government) என்ற அரசியல் ஆட்சி அதிகாரப் பிரிவினையை வகுத்துக் கொண்ட அரசியல் தீர்வு முன் வைக்கப்பட்டது.

இன்று 1983 ஆடிக் கலவரத்திற்குப் பின் இந்தியாவின் நல்லெண்ணத்துடன் இலங்கைச் சிங்கள அரசுக்கும் தமிழர் தலைவர்களுக்குமிடையில் கொழும்பில் கட்டப்பட்ட அனைத்துக் கட்சி (வட்ட மேசை) மாநாடு முதல் திம்புவில் நடைபெற்ற மாநாடு வரையில் பேச்சுவார்த்தையில் மையங்கொண்டுள்ள, அரசியல் தீர்வுக்கான அடிப்படை அம்சங்கள் 1957 முதல் கருக் கொண்டிருந்த அம்சங்கள் தான்.

ஆனுல் 1976 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் எடுக்கப்பட்ட சுதந்திரத் தமிழீழத் தீர்மானத்தின் பின்,1985ல் நடைபெற்ற திம்புப் பேச்சுவார்த்தையில் அதுவும் இந்திய அரசின் நல்லெண்ண உவியுடன் மறைமுகமான அச்சுறுத்தல்கள் மத்தியிலும் 1957ல் தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வா-பிரதமர் பண்டாரநாயக்கா கைச் சாத்திட்ட ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படைகளையாவது ஒப்புக் கொள்கிருர்களா, அல்லது தமிழினம் எங்கே நிற்கிறது என்பன பற்றி ஆராயலாம்.

1948ம் ஆண்டு, சுதந்திரம் கிடைத்த பின், எ. எஸ். சேனநாயக்க தலைமையிலான யூ என். பி அரசு தமிழனத்திற்கு எதிராக முதல் நிறைவேற்றிய சட்டம் இந்திய பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டமாகும். இதன் மூலம் பத்துலட்சம் மலையகத் தமிழர்கள், குடியுரிமை, வாக்குரிமை இழந்தனர் நாடற்றவர்களாக்கப்பட்டனர். ஆங்கில ஆட்சியில் அனுபவித்த அடிப்படை உரிமைகளையும் அரசியல் அதிகாரத்தையும் இழந்னர்.

இச்சட்டம் தமிழினத்தைப் பூண்டோடு ஒழிக்க வந்த சட்டம்- அடுத்து சிங்களத்தை ஆட்சிமொழியாக்கித் தமிழை அழிப்பார்கள் தொடர்ந்து தமிழ்மண்ணில் சிங்களக் குடியேற்றங்களை நடத்தி தமிழ் மண்ணில் சிங்களக் குடியேற்றங்களை நடத்தி தமிழ்மண்ணிலிருந்து தமிழரை அகற்றி விடுவார்கள்-இதுவே சிங்கள அரசின் திட்டம் என்று தந்தை செல்வநாயகம் தீர்க்கதரிசனமாக அன்று அறிவித்தார். தந்தை செல்வாவின் வார்த்தைகளில் சொன்னல் ''இன்று இந்தியத் தமிழனுக்கு அநீதி இழைக்கப்படுகிறது-நாளை மொழிப்பிரச்சனை வரும்பொழுது இலங்கைத் தமிழ் மக்களுக்கும், இதே கதி நேரிடும் எனவே இன்றே நாமெல்லாம் ஒன்று சேர்ந்து இந்த அநீதியை எதிர்க்க வேண்டும்.''

(பாராளு மன்ற நடவடிக்கை 10-12-1948)

அதே ஆண்டு டிசம்பர் 25ல் தமிழரசுக் கட்சி தொடக்கப்பட்டது.

சிங்கள அரசின் குடியுரிமைச் சட்டம் முதல்-சிங்களக் குடியேற்றம்-தனிச் சிங்களச் சட்டம் வரையில் அதாவது 1957 வரையில் தமிழரசுக்கட்சி அறவழியில் கிளர்ச்சிகளை நடத்தி வந்தது. 1956 ஆவணித் திங்கள் 19ல் திருமலையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் நாலு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து இக்கோரிக்கைகளை 1957-8-20க்கு முன் நிறைவேற்றுது விட்டால் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடங்கப் போவதாகத் தமிழரசுக் கட்சி அறிவித்தது. அந்த நாலு அம்சக்கோரிக்கைகளைக் குறிப்பிடுவோம்.

1. தீங்கிழைப்பதாக அமைந்துள்ள இன்றைய ஒற்றையாட்சி முறை அகற்றப்பட்டு தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும், ஒன்று அல்லது மேற்பட்ட பிரிவுகளைக் கொண்டதும் நாட்டின் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதும் வெளியார் தலையீட்டிலிருந்து இலங்கையைப் பாதுகாப்பதை உறுதி செய்வதும் சுயநிர்ணய உரிமையும், தன்னுதிக்கமும் உள்ளதும்- பகுத்தறிவுக்கேற்றதுமான- இணைப்பாட்சி முறையில் ஜனநாயக யாப்பு முறைக்குற்பட்ட ஒன்று அல்லது மேற்பட்ட மொழிவழி அரசுகளை உருவாக்க வேண்டும் என்றும்,

2. சிங்களத்தைப் போன்று-தமிழ் மொழியும் சமநிலையிலுள்ள ஆட்சி மொழியாக்கப்பட்டு அதன் இழந்த உரிமைகளைப் பெற வழி வகுக்கப்பட வேண்டும்.

3. இன்றைய குடியுரிமைச் சட்டங்களுக்குப் பதிலாக இந்த நாட்டைத் தாயகமாகக் கொண்டு இங்கு நிலையாக வாழ்ந்து வரும் மக்கள் அனைவரையும் இந்நாட்டின் பூரண குடி மக்களாக ஏற்றுக் கொள்ளும் சட்டங்களை உருவாக்க வேண்டும் என்றும்,

4. தமிழ் பேசும் மக்கள் மரபு வழியாக வாழ்ந்து வரும் பகுதிகளில் சிங்கள மக்களை குடியேற்றுவதை உடன் நிறுத்த வேண்டும்.

அவ்வறிப்பைத் தொடர்ந்துதான் அப்போதய பிரதமர் பண்டாரநாயக்கா தமிழரசுக் கட்சியைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தார். இதில் குறிப்பிடக் கூடிய அம்சம் என்னவெனில் 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சுதந்திரத் தமிழீழத் தீர்மான மெடுக்கும் வரையிலும் தமிழரசுக் கட்சியின் இலக்கு தமிழ் மாநிலத்தில் சுயாட்சித் தமிழரசும் சிங்கள மாநிலத்தில் சுயாட்சிச் சிங்கள அரசையும் உள்ளடக்கிய இணைப்பாட்சி அமைப்பை உருவாக்குவது என்பதாகும்.

பண்டாரநாயக்கா-செல்வநாயகம் உடன்பாட்டுக்கு முன் நிபந்தனைகள் சில கருத்திற் கொள்ளப்பட்டிருந்தன. முக்கிய அம்சங்களை மட்டும் குறிப்பிடுவோம்.

தமிழரசுக் கட்சியின் சில கோரிக்கைகளில் பிரதமருக்கு இணக்கம் ஏற்படவில்லை. ஒரு இணைப்பாட்சி அரசியலமைப்பை உருவாக்குவது பற்றியோ, பிரதேச சுயாட்சி உருவாக்குவது பற்றியோ அல்லது அரசகரும மொழியை நீக்குவது பற்றியோ பண்டாரநாயக்க அரசு சிந்திக்கும் நிலையில்லை என்று பிரதமர் குறிப்பிட்டார்.

அதே வேளை தமிழரசுக்கட்சி தனது அடிப் படைக் கொள்கைகளேயோ அதன் இலட்சி யத்தையோ விட்டுக் கொடுக்காத வகையில் பொது உடன்பாடொன்றுக்கு வர முடியாதா என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

இந்த நேரத்தில் பிரதமர், அரசாங்கத்தின் பிரதேச சபைகளை உருவாக்கும் நகல் ஒன்றை முன்வைத்து அவை தமிழரசுக் கட்சியின்கோரி கைகளை நியாயமான அளவுக்கேனும் நிறை வேற்ற முடியுமா என்று ஆராயுமாறு ஆலோ சனை கூறினர்.

மொழியைப்பொறுத்த வரையில் இணைப் பாட்சியரசின் மத்தியில் சிங்களமும் தமிழும் ம அந்தஸ்த்து உள்ளதாக இருக்க வேண்டும் என்று தமிழரசுக்கட்சி வலியுறுத்தி வந்த பொழுதிலும் பண்டார நாயக்க அரசு தமிழ் மொழியை தேசிய சிறுபான்மையினரின் மொழியென்பதை அங்கீகரித்ததுடன் வட கிழக்கு மாநிலத்தில் நிர்வாக மொழியாகத் தமிழே இருக்கும் என்றும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

மலையகத் தமிழரின் குடியுரிமையைப் பொறுத்தவரையில் 1948 ஆம் ஆண்டுக்கு முன் இலங்கையிலிருந்தவர்களுக்குக் குடியு ரிமை வழங்கவேண்டுமென்பதுதான் தமிழ ரசுக் கட்சியின் நிலைப்பாடாக இருந்தது. அதற்கேற்றவாறு குடியுரிமைச்சட்டத்தைத் திருத்த வேண்டும் என்றும் கோரிவந்தது. இதனைவலியுறுத்திய தமிழரசுக்கட்சி இந்த அடிப்படையில் மிக விரைவாக ஒரு தீர்வு ஏற்படவேண்டும் என்றும் வற்புறுத்தியது, இதனை பிரதமர் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு கூடிய விரைவில் தீர்வு காண்பதாக உடன் பட்டிருந்தார்.

1. பிரதேச சபைகளின் எல்லைகள்- சட்டத் திலே அட்டவணையாகச் சேர்க்கப்பட்டு வரையறுக்கப்பட வேண்டும்.

2. வடமாகாணம் ஒருபிரதேச சபையாகவும் கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது கூடிய பிரதேசசபைகளாகவும் அமையும்.

3. மாகாண எல்லைகளேயும் தாண்டி இரண்டு அல்லது கூடிய பிரதேச சபை கள் இணைவதற்குச் சட்டத்தில் விதி இடம் பெறும். பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு அமைவாக, ஒரு பிர தேச சபை தன்னைப் பிரித்துக் கொள்ள வும் இடம் இருக்கும் இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேச சபைகளுக்கும் பொதுவான குறிப்பிட்ட நோக்கங் களுக்கு அவை சேர்த்துச் செயல்படச் சட்டத்தில் இடம் இருக்கும்.

4. பிரதேச சபை உறுப்பினர் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவர். அதற்கான தொகுதிகளை வகுப்பதற்குத் தொகுதி நிர்ணயக் குழுவோ, குழுக்களோ அமைப் பதற்கு ஏற்பாடு செய்யப்படும். பிர தேச சபையின் எல்லைக்குள் அமைந்த மாவட்டங்களின் பாராளுமன்ற உறுப் பினர் - பிரதேச சபைத் தலைவராவதற் குத் தகுதி பெறுவது பற்றி ஆலோசிக்கப் படும். அரசாங்க அதிபர்கள் பிரதேச ஆணையாளர்களாக நியமிக்கப்படுவது ஆலோசிக்கப்படும். பெரிய பட்டினங் கள், கேந்திர நகரங்கள்,மாநகரசபைகள் ஆகியவற்றை மேற்பார்வை செய்யும் அதிகாரங்கள் ஆராயப்படும்.

5. அதிகாரங்கள் பாராளுமன்றத்திஞல் வழ ங்கப் பெற்றுச் சட்டத்தில் வரையறுக்கப் பட வேண்டும். விவசாயம், கூட்டுறவு, காணியும் காணி அபிவிருத்தியும், குடி யேற்றம், கல்வி, சுகாதாரம் கைத் தொழில், மீன்பிடித்துறை, வீடமைப்பு சமூக சேவை, மின்சாரம், தண்ணீர்த் திட்டங்கள், நெடுஞ்சாலைகள் ஆகியவை உள்ளடக்கக் குறிப்பிட்ட விடயங்கள் பிரதேச சபைகளின் அதிகாரத்திற்குட் பட்டிருக்க வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. வேண்டிய அதிகார, எல்லைகள் சட்டத்திலேயே வரையறுக்கப் படும்.

6. குடியேற்றத் திட்டங்களைப் பொறுத்த வரை தமது அதிகார எல்லைக்குட்பட்ட காணிகள் வழங்கப்பட வேண்டிய குடி யேற்ற வாசிகளைத் தெரிவு செய்வதும், அத்திட்டங்களில் வேலைக்கமர்த்தப்படும் ஆட்களைத் தெரிவு செய்வதும் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருக்கும் என்று ஒப்புக் கொள்ளப்பட் டது. இப்போது கல்லோயா அபிவிருத்திச் சபையிஞல் நிர்வகிக்கப்படும் பிரதேசத் தின் நிலை ஆராயப்படவேண்டும்.

7. சட்ட மூலத்தில் பிரதேச சபைகளை யொட்டி உள்ளூராட்சி அமைச்சருக்கு

அளிக்கப்பட்ட அதிகாரங்களை மாற்றித் தேவையான இடத்தில் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கும் பொருட்டு அவ்விதிகள் திருத்தப்படும்.

8. பிரதேச சபைகளுக்கு மத்திய அரசாங்கம் மொத்தமாக நிதி வழங்கும். அத்தொகை கணக்கிடப்பட வேண்டிய கொள்கைகள் பின் ஆராயப்படும். பிரதேச சபைகளுக்கு வரி விதிக்கவும் கடன் வாங்கவும் அதிகாரம் இருக்கும்.

(1957-07-26ல் இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது)

இந்த அடிப்படைகளில் உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தும் தீர்மானம் நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்த உடன்பாட்டை அன்று மிக மூர்க்கத்தனமாக எதிர்த்தவர்தான் இன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனா. பண்டாரநாயக்கா செல்வநாயகத்திற்குச் சிங்களவரை விற்றுவிட்டாரென்று சிங்களப்பகுதியிலும், செல்வநாயகம் பண்டார நாயக்காவுக்குத் தமிழரை விற்று விட்டாரென்று தமிழ்ப் பகுதியிலும் சமமான பிரச்சாரம் தீவிரம் பெற்றது. ஜே ஆர். ஜெயவர்த்தனா இவ்உடன்பாட்டுக்கு எதிராக முதல்அடி (First step)என்ற புத்தகத்தை வெளியிட்டு, கண்டிக்குப் பாதயாத்திரையும் நடத்தினார். புத்தபிக்குகள் பிரதமர் அலுவலகத்தின்முன் சத்தியாக்கிரகம் தொடங்கினர். இக்கிளர்ச்சிகளால் பண்டார நாயக்கா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார்.

இதைத் தொடர்ந்து பண்டாரநாயக்க அரசு சிங்களச் சட்டத்தைத்தீவிரமாக அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தது. அதன் முதல் நடவடிக்கையாக மோட்டார் வண்டிகளில் சிங்களச் ''ஸ்ரீ'' பொறித்து தமிழ் மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டது. சிங்களச்''ஸ்ரீ''யை அழித்துத் தமிழ் எழுத்துப் பொறிக்கும் போராட்டத்தைத் தமிழரசுக் கட்சி தொடங்கியது. 1958 ''மே'' 23ல் வவுனியாவில் தொடங்கிய தமிழரசுக் கட்சி மாநாட்டை தொடர்ந்து தமிழினத்திற்கெதிரான இனக் கலவரம் (1958 ''மே'' மாதம்) வெடித்தது. பல ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். சொத்துக்கள் சூறையாடப்பட்டன பல இலட்சம் மக்கள் தென்னிலங்கையிலிருந்து மலையகத் தமிழர் உட்பட வடகிழக்கு மாகாணங்களுக்கு கப்பல்களில் அகதிகளாக வந்தனர்.

இதன்பின் பிரதமர் பண்டார நாயக்காவை புத்தபிக்கு ஒருவன் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றான். அதைத் தொடர்ந்து 1960ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பண்டார நாயக்காசெல்வநாயகம் ஒப்பந்தத்தின் அம்சங்களைத்தான் நிறைவேற்றுவதாக தமிழ்த்தலைவர்களிடம் வாக்குறுதி கொடுத்து பதவிக்கு வந்த திருமதி பண்டார நாயக்கா அரசு வாக்குறுதியை மீறி சிங்கள மொழி நிர்வாகத்தைத் தமிழ் மாநிலங்களில் தீவிரமாக நடைமுறைப் படுத்த முயற்சித்தது, இதனால் தமிழ் மாநிலங்களில் தமிழரசுக்கட்சி தொடர்ச்சியான சத்தியாக்கிரக அறப் போராட்டத்தை நடத்தியது. மூன்று மாதங்கள் தமிழ் மாநிலங்களில் சிங்கள அரசே இல்லை என்றாகிவிட்டது. தமிழரசு முத்திரை வெளிவந்தது, அதைத் தொடர்ந்து அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. தமிழரசுக் கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர். சத்தியாக்கிரகிகள் மீது பலாத்காரம் பயங்கரவாதம் ஏவிவிடப்பட்டது. சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது.

1965ல் பதவிக்கு வந்த டட்லி சேனநாயக்க அரசாங்கம் செல்வ நாயகத்துடன் பண்டா-செல்வா (1957) ஒப்பந்தத்தின் அடிப்படைகளைக் கொண்ட உடன்படிக்கை ஒன்றைச் செய்தது. அந்த ஒப்பந்தத்தில் சில முக்கிய அம்சங்களை அடுத்த இதழில் பார்ப்போம்.

—பார்த்தீபன்

---

❖ வாசகர்களிடமிருந்து கருத்துக்களும், ஆக்கங்களும், வரவேற்கப்படுகிறது

❖ பிற வெளியீட்டாளர்களின் வெளியீடுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

❖ சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும் சந்தா விபரம்: ஒரு வருடம் ரூ30 அரை வருடம் ரூ 15.

---

# ஆணை! ஆணை!

உடைக்காமல் விடமாட்டோம் இலங்கைத் தீவை !
ஒழிக்காமல் விடமாட்டோம் சிங்கள நாயை !
படைக்காமல் விட மாட்டோம் தமிழ் ஈழத்தை !
பாராண்ட தமிழின் மேல் ஆணை !. ஆணை !

தடைக்கற்கள் எதுவரினும் தகர்த் தெறிவோம்.
தமிழன்னை கைவிலங்கை முறித்தெறிவோம்
இடைப்பட்ட காலத்தின் அடிமைப் பட்டம்
எம்மைவிட்டு ஓடும் வரை விடவே மாட்டோம்.

கேடு கெட்ட சிங்களத்துப் பேய்க் கூட்டத்தால்
கெட்டு விட்ட தமிழ்கற்பு மீதில் ஆணை !
ஓடுகின்ற தமிழ்க் குருதி மீதில் ஆணை !
உயிர் விட்ட தமிழ்ப் பிணத்தின் மீதில் ஆணை !

**கவிஞர் மதுரைக் கூத்தன்**
**(நெருப்பு வீச்சு)**

புரட்சி என்றால் துப்பாக்கிப் பிரயோகம், தடியடி என்று அர்த்தம் இல்லை; மக்கள் வாழ்க்கையின் போக்கையே மாற்றுவதுதான் புரட்சி !

— ஜவகர்லால் நேரு.

# " மலரும் தமிழீழம் "

நூல்-அஞ்சல்

பெறுநர் :

..................................................

..................................................

..................................................

..................................................

அனுப்புதல் :

ஆசிரியர்,
" மலரும் தமிழீழம் "
31/16, கரீம் பில்டிங்,
தில்லை நகர்,
திருச்சி-620 018